பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 19 வியாழக்கிழமை (04.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :251

## ஜனாதிபதித் தேர்தல் எப்போது?

# சந்திரிகாவின் கோரிக்கையை உயர் நீதிமன்றம் பரிசீலிக்காது

## கவனத்தில் எடுக்காதுவிடும் சாத்தியம் அதிகம் என்கின்றனர் சட்ட நிபுணர்கள்

கொழும்பு,ஓகஸ்ட் 4

**அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது குறித்து ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்கும்படி உயர்நீதிமன்றத்தை ஜனாதிபதி கோரியிருக்கும் அதேசமயம், அந்த விடயத்தை உயர்நீதிமன்றம் பரிசீலிக்காமல் விடுவதற்கும், அதைக்கவனத்தில் எடுக்காமல் தவிர்ப்பதற்கும் வாய்ப்புகளும் சாத்தியமும் அதிகம் தென்படுவதாக சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர். விடயமறிந்த வட்டாரங் களும் அதனை ஊர்ஜிதப்படுத்தின.**

நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் தேர்தலை அடுத்தும் பின்னர் 2000 ஆம் ஆண்டு கடைசியிலும் தனித்தனியாக இருவேறு சந்தர்ப்பங்களில் தாம் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள நேர்ந்தமைக்கான காரணங்களை அந்தக் கடிதத்தில் உயர்நீதிமன்றத்துக்கு விளக்கியிருக்கின்றார்.

இந்தப் பின்னணியில் தமது பதவிக்காலம் இந்த ஆண்டு இறுதியில் முடிவடைகின்றதா அல்லது அடுத்த ஆண்டு இறுதியில் முடிவடைகின்றதா என்பதைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதை ஆராய்ந்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை அடுத்த பத்துத் தினங்களுக்குள் தனக்கு அறியத்தருமாறு ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் உயர்நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

ஆனால், இத்தகைய விடயத்தை உயர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்ற முடிவுக்கு காத்திருக்க வேண்டும்!

கொழும்பு,ஓக.4

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது குறித்து ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்கும்படி உயர்நீதிமன்றை ஜனாதிபதி கோரியிருப்பதால் மன்றின் தீர்வுவரும்வரை காத்திருக்கத்தான் வேண்டும் என்றுகூறியிருக்கிறார் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் மகன் விமுக்திக்கு அரசியலில் துளி ஆர்வமுமில்லை

கொழும்பு,ஓக.4

ஓர் அரசியல்வாதியாக வரவேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. எனக்கு அரசியலில் கொஞ்சமேனும் ஆர்வம் கிடையாது. எனது இலட்சியம் வேறு.

இவ்வாறு கூறினார் ஜனாதிபதி சந்திரிகா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயல்குறித்து ஐ.தே.க. பிரதிச் செயலாளர் கிண்டல்

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்குக் கிடையாது தேர்தல் நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் பேசவேண்டிய ஜனாதிபதி, நீதியரசர்கள் முன்சென்றிருப்பது தேர்தல் ஆணையாளரை அவமானப்படுத்தும் ஒரு செயலாகும் என்றார் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேச விடுதலைக்கு அமெரிக்கா உதவவேண்டும்!

### மாவை சேனாதிராசா வாஷிங்ரனில் கோரிக்கை

வாஷிங்ரன்,ஓக.4

வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதை அமெரிக்கா மீளாய்வு செய்ய வேண்டும். அத்துடன், தமிழ்த் தேச விடுதலைக்கும் அந்த நாடு உதவவேண்டும்.

- இவ்வாறு அமெரிக்கத் தலைநகரில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா. இலங்கை நாடாளுமன்ற பொதுச்சேவைக் குழுவினர் உத்தியோகபூர்வப் பயணமாக வாஷிங்ரன் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் அவர்கள்அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதான செயலர் டொனால்ட் ஏ.மேம்ப்பைச் சந்தித்து நீண்டநேரம் பேசினர். அப்போது மாவை. சேனாதிராசா மேற்கண்டவாறு கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடமே நடத்த உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றில் நேற்று மனு

கொழும்பு,ஓக.4

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்று நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண.ஓமல்பே சோபிததேரர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்தை 1999 டிசம்பர் 22ஆம் திகதியன்று - தேர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து இராணுவத்தை அகற்ற உடன் நடவடிக்கை எடுங்கள்!

### கண்காணிப்புக் குழுவுக்கு தமிழ் மக்கள் பேரவை மகஜர்

திருகோணமலை,ஓக.4

திருகோணமலையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை உடன் அங்கிருந்து அகற்றுமாறு கோரி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை.

நகரில் சட்டவிரோதமாக-இரவோடு இரவாக அமைக்கப்பட்ட - புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றும்படி தமிழர்கள் கோரியதற்கு, திறந்தவெளிச் சிறைச்சாலைதான் அவர்களுக்குக் கிடைத்த பரிசா என்றும் அது கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, எதிர்க் கட்சித்தலைவர், முப்படைத் தளபதிகள், மாவட்ட பொலீஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செப்ரெம்பரில் கிளிநொச்சியில் தமிழர் உரிமை பிரகடன மாநாடு

வவுனியாவில் நடைபெற்ற தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தும் வகையில் கிளிநொச்சியில் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் மக்கள் எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுச்செயலாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இந்நிழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள், கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் வழங்கினர்.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்வில் ஒரு லட்சம் வரையான மக்களை அணிதிரட்டி சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மக்கள் எழுச்சி நிகழ்வுக்கான தொடர் மக்கள் சந்திப்புகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. (எ-க)

## போராளிகளின் பயணப் பாதுகாப்பு:

# புலிகள் அனுப்பிவைத்த பதில் கொழும்பில் ஆராயப்படுகிறது

கொழும்பு.ஓக.4

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான பயணப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் அரசு முன்வைத்திருந்த யோசனைகளுக்கு புலிகள் வழங்கிய பதில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பில் அரசு முன்வைத்திருந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்திருக்கிறார்கள் எனச் செய்திகள் வெளியாகியிருப்பது குறித்துக் கேட்டபோதே ஹொக்லண்ட் மேற்கண்டவாறு கூறினார். அவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவான நேற்று அடியார் ஒருவர் பல மைல் தூரம் தூக்குக் காவடி எடுத்துச்செல்வதைப் படத்தில் காணலாம்.

(படம் : தேசன்)

# மாவைக் கந்தன் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடந்தது

வலி.வடக்கு, ஓக.4

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேர்த்திருவிழாவில் பங்குகொண்டனர்.

நேற்றுக் காலை முதல் அடியார்கள் தமது சொந்த வாகனங்களிலும் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களிலும் ஆலயத்திற்கு வருகைதந்தனர்.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள படையினரின் சோதனை நிலையத்தில் வைத்து ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் ஆலயத்திற்குச் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

ஆலயத்தில் அடியார்களுக்கு தாக சாந்தி மற்றும் அன்னதான வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கிடையில் நேர்த்திக்கடன் நிறைவேற்றும் வகையில் தூக்குக் காவடிகளும் சாதாரண காவடிகளும்கூட நேற்றைய தினம் ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

இதேவேளை, மாவிட்டபுரம் கந்தசுவாமி தீர்த்தோற்சவம் இன்று கீரிமலையில் இடம்பெறவுள்ளது. இன்று ஆடிஅமாவாசை தினம். எனவே, பிதிர்க்கடன் நிறைவேற்றும் பொருட்டு பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இன்றையதினம் கீரிமலையில் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(எ-86)

# மோட்டார் சைக்கிள்களிலும் இன்று கீரிமலை செல்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.4

ஆடி அமாவாசைத் தினமான இன்று பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்காகக் கீரிமலைக்குச் செல்பவர்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களிலும் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான அனுமதியை யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் வழங்கியுள்ளார் என்று வலி.வடக்குப் பிரதேச செயலர் முரளிதரன் உதயனுக்குத் தெரிவித்தார். எனினும், துவிச்சக்கர வண்டிகளில் கீரிமலைக்குச் செல்வதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் படைத்தளபதி கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று அதிகாலை 5.30 மணிதொடக்கம் தெல்லிப்பழை முன்னரங்க சோதனைச் சாவடி ஊடாக பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். அங்கு வழமையான உடற்பரிசோதனை மற்றும் ஆள் அடையாள சோதனை என்பவற்றை முடித்துக்கொண்டு, தமது மோட்டார் சைக்கிள்களிலோ ஏனைய வாகனங்களிலோ செல்லமுடியும். இவற்றைவிட தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலிருந்து கீரிமலைக்கு பஸ்சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வலி.வடக்குப் பிரதேச செயலர் மேலும் கூறினார்.

இதேவேளை, -

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவான நேற்றையதினம் அடியவர்கள் கோயிலுக்கு மோட்டார் சைக்கிள்களில் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை .

இந்த ஆலயத்தின் உற்சவ நாள்களில் ஆலயம் வரை மோட்டார் சைக்கிள்களில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் தேர்த்திருவிழாவான நேற்றையதினம் மோட்டார் சைக்கிள்களில் செல்வதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று படையினர் தெரிவித்தனர்.

கோயிலுக்குச் செல்வதற்கென மோட்டார் சைக்கிள்களில் வந்த பல அடியவர்கள் அவற்றைப் பொருத்தமான இடத்தில் விட்டுச் செல்வதற்கு பல சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

இதனால் நேற்று மாவைக் கந்தனின் தேர்த்திருவிழாவில் அடியார்களின் எண்ணிக்கை கணிசமானளவு குறைந்திருந்ததையும் அவதானிக்கமுடிந்தது.

(த)

## 'ஐ' அலைவரிசையில் ஆங்கில பயிற்சி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக.4

மாணவர்களின் ஆங்கில அறிவினை மேம்படுத்தும் நோக்கில் ஆங்கிலப் பயிற்சி நிகழ்சி நிரலும் அறிவும் (English With Aliens) என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினைக் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்ச்சி இன்று தொடக்கம் தேசிய தொலைக்காட்சியின் 'ஐ' அலைவரிசையில் பிரதி திங்கள், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ளது.

தரம் 6 -9 வரையான மாணவர்களின் ஆங்கிலமொழிக் கற்றலை மேம்படுத்தும் நோக்குடன் உலகவங்கி, ஆசிரிய கல்வி மற்றும் ஆசிரியர் பரவலாக்கம் (TETD) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இப்புதிய தொலைக்காட்சி நிகழ்சியை கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-204)

# பிரதியமைச்சர் மேர்வினுக்கு எதிராக மலையகக் கட்சிகள் ஒன்றிணைவு

## 8 ஆம் திகதி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

இந்திய வம்சாவளியினரை இழிவுபடுத்தும் வகையில் பேசிய தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான போராட்டத்தில் மலையக மக்கள் முன்னணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து களமிறங்குகின்றன.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா அரசியல் நாகரிகமற்ற முறையில் மலையகத் தமிழர்களைத் தூஷித்த செயலைக் கண்டித்து மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் எட்டாம் திகதி கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்தில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சி வேறுபாடுகளைக் கைவிட்டு இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அமைப்புகளும் கலந்துகொள்ள வேண்டுமென மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய வம்சாவளியினரை இழிவுபடுத்தும் வகையில் பேசிய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ள இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி, எட்டாம் திகதி கொழும்பில் நடத்திவிருக்கும் ஆர்ப்பாட்டத்திலும் கட்சி பேதமின்றி கலந்துகொள்ளும் என அறிவித்துள்ளது.

இப்போராட்டத்தில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இ.தொ.கா கலந்துகொள்ளவுள்ளதாக அக்கட்சியின் செய்தி அறிக்கை ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏனைய மலையக அமைப்புகளும் கட்சி பேதமின்றி கலந்துகொண்டு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் ஆறுமுகன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

(க)

# தமிழ்த்தேச விடுதலைக்கு அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தும் இன்னும் இயல்புநிலை அங்கு தோன்றவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் எந்தமுன்னேற்றமும் ஏற்படவுமில்லை.

ஆழிப்பேரலையால் ஏற்பட்ட அழிவுகள் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களிலேயே அதிகம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கணிசமான பகுதிகள் அவற்றில் அடங்கும்.

ஆழிப்பேரலை அழிவுகளால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வை மீளக்கட்டியெழுப்ப அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் 3 ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்க முன்வந்துள்ளன. இந்த நிதியைப் பயன்படுத்த அரசும், புலிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றின் அவசியம் எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது.

இதனால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நல்லுறவும், இணக்கமும் ஏற்பட்டு சமாதானத்துக்கான ஏதுநிலை உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. அதனடிப்படையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண முகாமைத்துவக் கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆனால், இந்தக் கட்டமைப்புக்குத் தேவையான நிதியை நேரடியாக வழங்க முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. ஜப்பானும் அவ்வாறே தெரிவித்துவிட்டது. பொதுக்கட்டமைப்பின் முக்கிய பிரிவுகளுக்கு இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றமும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால், இந்த முயற்சி மீது தமிழ் மக்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாமும், விடுதலைப் புலிகளும் நம்பிக்கை இழந்துள்ளோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான முயற்சிகள் மூலம் தீர்வுகாணப்படும் என்ற நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இலங்கை அரசினதும் நீதி மன்றத்தினதும் நடவடிக்கைகளும், அமெரிக்காவின் அறிவிப்பும் நிலைமைகளை மேலும் சீர்குலைப்பதாகவே அமைந்துள்ளன.

இலங்கையில் கடந்த 50 வருடங்களாக தமிழ்மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காகப் போராடி வருகின்றனர். முதலில் ஜனநாயக வழியில்போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றால் நாம் எவற்றையும் பெறவில்லை. பதிலாக அப்போராட்டங்கள் இராணுவ பலத்தால் - அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் - அடக்கி ஒடுக்கப்பட்டு வந்துள்ளன. சர்வதேச நாடுகள் அரச பயங்கரவாதம் பற்றி ஒரு போதும் பேசுவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரச பயங்கரவாதத்தின் விளைவாகவே உருவானது. தமிழ்த்தேச மக்களின் பாதுகாப்பிற்காகவும் ஆயுதம் ஏந்த அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உண்மையில் இலங்கையில் அதுதான் நடந்தது. எனவேதான் தமிழ் மக்களின் போராட்டத்தை - விடுதலைப் புலிகளின் போராட்டத்தை - பயங்கரவாதம் என்றுகூறி, அல் - ஹெய்டா போன்ற இயக்கங்களுடன் ஒப்பிடுவதையிட்டு நாம் கவலையுடைகின்றோம்.

பயங்கரவாதம் என்பதன் வரைவிலக்கணம் என்ன? அது பற்றி நாம் விரிவாக ஆராய வேண்டியவர்களாக உள்ளோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா தனது வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் வைத்திருப்பதை வாஷிங்ரன் மீளாய்வு செய்யவேண்டும். அத்துடன், தமிழ்த்தேச விடுதலைக்கும் அமெரிக்கா உதவவேண்டும்- என்றார் மாவை சேனாதிராசா.

அமெரிக்கா சென்றுள்ள இந்தக் குழுவில் நாடாளுமன்ற பொது முயற்சிகள் ஆலோசனைக் குழுத்தலைவர் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் அமரதுங்க, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, விஜயதாஸ் ராஜபக்ஷ, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்து நெட்டி ஆகியோரும் அடங்கியுள்ளனர். இவர்களுடன் நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவும் சென்றுள்ளார்.

(எ-க)

# சந்திரிகாவின் கோரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்று பரிசீலிக்காது என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அதை விசாரணைக்கு ஏற்பதா என்று முடிவு செய்து, விசாரணைக்கு ஏற்பது என தீர்மானித்தால் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளை கட்டுப்படுத்தும் (Binding) தீர்ப்பு ஒன்றை வழங்க வேண்டிய நிலையில் உயர்நீதிமன்றம் உள்ளது.

அத்தகைய நிலையில் அதேவிவகாரம் தொடர்பாக யாரையும் கட்டுப்படுத்தாத (Non -Binding) - வெறும் ஆலோசனை வழங்குகின்ற அல்லது கருத்துக்கூறுகின்ற ஒரு நடவடிக்கையை உயர்நீதிமன்றம்மேற்கொள்வது பொருத்தமற்றதும், பின்னர் சட்டக்குழப்பங்களைத் தரக்கூடியதும் என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்தோடு பின்வரும் விடயங்களையும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர்.

- அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அரசமைப்பின் மூலமும் ; சட்டங்களின் மூலமும் பிரத்தியேகமாக தேர்தல் ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்ட விடயமாகும். அதை அவர் செய்யும் முன்னர், அதில் தலையிடும் விதத்தில் உயர்நீதிமன்றம் கருத்தோ, ஆலோசனையையோ தெரிவிப்பது அவரது பணியை குழப்புவதாக அமையலாம்.
- அந்த விடயத்தை ஆற்றும்போது அவர் செய்யவேண்டியதை செய்யத்தவறி, அல்லது செய்யக்கூடாததை செய்து, ஒரு தவறு நிகழ்ந்துள்ளதாக யாரேனும் கருதினால் - அதற்காக உரிய நிவாரணம் கோரி அவர்கள் நீதிமன்றுக்கு வந்தால் - அந்தச் சந்தர்ப்பத்தில் நீதிமன்று தலையிட்டு தீர்ப்புக்கூறுவது வேறு .

இப்போது இந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக ஜனாதிபதியின் கோரிக்கையை ஆராய்ந்து ஓர் ஆலோசனையை வழங்கிவிட்டால் அப்படி தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைக்கு எதிராக யாரேனும் நிவாரணம் கூறி நீதிமன்றத்துக்கு வந்தால் அதை தனியாக விசாரித்து அதனடிப்படையில் ஓர் தீர்ப்பை வழங்குவது, அதனால் பாதிப்புறும். ஏற்கனவே ஒருதலைப்பட்சமாக விசாரித்து கருத்து வழங்கிய அதே விடயத்திற்காக பின்னர் ஒரு தடவை இரு தரப்பு வாதங்களுடன் கூடிய விசாரணையை நடத்தி புதிய தீர்ப்பு ஒன்றை வழங்க முற்படுவது வீண் சட்டக்குழப்பங்களையும் தவறான முன்னுதாரணங்களையும் ஏற்படுத்தும் .

- ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தீர்மானிப்பதும் நடத்துவதும் தேர்தல் ஆணையாளரின் பணி. அதில் ஜனாதிபதிக்கு எந்தப் பங்கு பணியும் இல்லை. அப்படி இருக்கையில் - தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கையில் தலையிடும் வகையில் - ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவேண்டிய தேவையேதும் இல்லை. என் று - உயர்நீதிமன்றம் கருதவேண்டியிருக்கும் என்கின்றன சட்ட வட்டாரங்கள் .

இந்தக் காரணங்களினால் ஜனாதிபதியின் கோரிக்கையை பரிசீலிக்காமல் அந்த விவகாரத்தை ஜனாதிபதிக்கே உயர்நீதிமன்றம் திருப்பி அனுப்ப சாத்தியங்கள் அதிகம் உண்டு என்கின்றன சட்டவட்டாரங்கள்.

இதேசமயம், ஜனாதிபதித் தேர்தலை இந்த வருட இறுதிக்குள் நடத்துமாறு கோரி ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் வண. ஓமல்பே சோபித தேரர் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நாளை உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. அப்போது இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ-க)

# பிரிட்டனில் குண்டுவெடிப்புக்குப் பின்னர் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் அதிகரிப்பு!

லண்டன்,ஓக.4

பிரிட்டனில் கடந்த மாதம் இடம் பெற்ற தொடர்குண்டுவெடிப்புகளையடுத்து, அங்கு முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் ஆறு மடங்கு அதிகரித்துள்ளன.

இந்த ஆண்டில் பிரிட்டனில் இதுவரை 269 மத வெறுப்பு குற்றங்கள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியில் மொத்தம் 40 குற்றங்கள்தான் பதிவாகியிருந்தன.

இந்த விவரங்களை லண்டன் மாநகரப் பொலீஸார் தெரிவித்தனர்.

பெரும்பாலான சம்பவங்கள், சிறிய அளவிலான தாக்குதல், தவறான வார்த்தைப் பிரயோகங்களாகத் தான் இருந்தாலும் கூட, உணர்வு பூர்வமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்று பொலீஸ் ஆணையாளர் தெரிவித்தார்.

மசூதிகளுக்குச் சேதம் விளைவித்தல், உடல் ரீதியான, வார்த்தை ரீதியான, துன்புறத்தல்கள் ஆகியவையும் குற்றங்களில் அடங்கும் - என்றார் அவர்.

தொடர் குண்டுவெடிப்பு நடைபெற்ற பிறகு, அடுத்த 3 நாள்களில் மட்டும் 68 குற்றச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இதற்கிடையே பல்வேறு நகரங்களில் முஸ்லிம்களின் குறைகளைக் கேட்கும் நிகழ்ச்சிக்குப் பிரிட்டன் அரசு ஏற்பாடு செய்துள்ளது. ஏற்கனவே, உள்துறை அமைச்சர் ஹஸல் பிளீருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சு நடைபெற்றுள்ளது.

இதற்கிடையே, கடந்த ஜூலை 21 ஆம் திகதி நடைபெற்ற குண்டு வெடிப்புகளுக்காக கைதுசெய்யப்பட்ட ஒருவரைப் பொலீஸார் விடுவித்துள்ளனர். (ஒ)

# மௌரிடேனியனில் இராணுவப் புரட்சி!

மேற்காபிரிக்கநாடான மௌரிடேனியனில் இராணுவத்தினர் அந்த நாட்டு அரச வானொலி, தொலைக் காட்சி மற்றும் தலைநகர் நுவாகோட்டில் உள்ள பிரதான வீதிகள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மாளிகைக்கான வீதிகளையும் இராணுவம் முற்றாகத் தடைசெய்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டு ஜனாதிபதி மவோயியா ஔல்ட் சிட் அஹ்மட் சவூதி அரேபிய மன்னரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்றவேளை இராணுவத்தினர் இவ்வாறான அதிரடி நடவடிக்கையொன்றை மேற் கொண்டுள்ளனர்.

2003ஆம் ஆண்டு ஜூன்மாதம் அரசுக்கு எதிராக இராணுவத்தினர் புரட்சியின் ஈடுபட்டு அரசைக் கவிழ்க்க முயன்றபோது ... ஆதரவான படையினர் உடனடியாகச் ... பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேபோன்று, 2004ஆம் ஆண்டும் அரசைக் கவிழ்ப்பதற்கு இரு தடவைகள் முயற்சிகள் நடந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# விபத்துக்குள்ளான விமானத்தில் தீ; 309 பயணிகளும் உயிர்தப்பினர்!

## ரொரன்டோ விமான நிலையத்தில் சம்பவம்



ரொரன்டோ,ஓக.4

பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான 'ஏர்பஸ்' விமானம் பாரீஸ் நகரில் இருந்து கனடா நாட்டின் ரொரன்டோ நகருக்கு புறப்பட்டுச் சென்றது. அந்த விமானத்தில் 297 பயணிகள் 12 சிப்பந்திகள் உட்பட 309 பேர் இருந்தனர்.

நேற்று அதிகாலை அந்த விமானம் ரொரன்டோ விமான நிலையத்தில் தரை இறங்க முயன்றபோது வானிலை மிகமோசமாக இருந்தது. பலத்த காற்றும் வீசியது.

இதனால், விமானம் தடுமாறியது. ஓடுபாதையை விட்டு விலகி ஓடியது. இந்த நிலையில் மின்னல் தாக்கியதால் அந்த விமானத்தில் தீ பிடித்துக் கொண்டது. இறக்கைகளில் பிடித்த தீ விமானத்தின் இதர பகுதிகளுக்கும் பரவியது. விமானம் தரையில் முட்டி மோதி நிற்பதற்கு முன்பே விமானத்தின் அவசரக் கதவு திறக்கப்பட்டது. அந்த கதவு வழியாக விமானத்தில் இருந்தவர்கள் குதித்து ஓடினர். சிறிது நேரத்தில் விமானம் முழுவதும் தீயில் எரிந்து சாம்பலாகி விட்டது. (ஒ)

# அமெ. ஊடகவியலாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை!

பக்தாத்,ஓக.4

ஈராக்கில் பணியாற்றிய அமெரிக்க ஊடகவியலாளர் ஸ்டெபன் வின்சென்ட் இனந்தெரியாத ஆயுததாரியொருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

தென் ஈராக்கின் பஸ்ரா நகரில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப் பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது கொலை குறித்து உடனடியாக விசாரணைகளை மேற் கொள்ளுமாறு அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என பஸ்ரா நகர் ஆளுநர் வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

பஸ்ரா நகர் குறித்தும் அங்கு நிகழும் வன்முறைகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்தும் புத்தகமொன்று எழுதி வந்த இவர், நேற்று சுட்டுக்கொல்லப் பட்டார். (க)

## சூடானில் புதிய உப ஜனாதிபதி

சூடானின் உப ஜனாதிபதி ஹராவ் விமான விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்தப் பதவிக்குப் புதியவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் கிளர்ச்சி அமைப்பான சூடானிய மக்கள் விடுதலை இராணுவத்தின் அங்கத்தவரான கிர் என்பவரே புதிய உபஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அனைத்துச் சூடானிய மக்களின் நலனுக்காக ஹராங் அவர்களின் கொள்கையைத் தான் தொடர்ந்து கடைப் பிடிப்பேன் என்று அவர் கூறியுள்ளார். (க)

## ஈராக்கில் அமெ.படையினர் உயிரிழப்பு

வடமேற்கு ஈராக்கில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அமெரிக்கக் கடற்படையினர் 14 பேரும், ஈராக்கியரான அவர்களது மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர். சிரிய நாட்டு எல்லையருகே உள்ள ஹடிதா நகரில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. (ஒ)

# 'கோமா' பீடித்த பெண்ணுக்குப் பிரசவம்



'கோமா' நிலையில் இருந்த கர்ப்பிணிப் பெண் சிசுவைப் பிரசவித்தார். மூளைப் புற்று நோயால் பீடிக்கப்பட்ட சூசனி ரொடஸ் என்ற அமெரிக்கப் பெண்மணி கடந்த மே மாதம் 7 ஆம் திகதி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். அத்துடன் கோமா நிலைக்குள்ளானார். அவரது மூளை செயலிழந்து இறப்புநிலையை அடைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அந்தச் சமயத்தில் சூசன் நான்கு மாத கர்ப்பிணியாக இருந்தார். சூசனின் கணவர் தனது வேலையைக் கைவிட்டு மனைவிக்குப் பக்கத்தில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக அவரைப் பராமரித்தார். இந்நிலையில் சூசன் நேற்று முன்தினம் வேர்ஜினியா மருத்துவமனையில் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார். 7 மாதங்களில் பிறந்த சிசு 800 கிராம் எடையுள்ளது. குழந்தை தீவிர மருத்துவக் கண்காணிப்பில் உள்ளதாக கூறிய மருத்துவர்கள் தாயின் நிலைபற்றி தகவல் வெளியிடவில்லை.

# சிங்கப்பூரில் அடுத்த ஆண்டுமுதல் உணவகங்களில் புகைப்பிடிக்கத்தடை

சிங்கப்பூர்,ஓக.4

சிங்கப்பூரில் அடுத்த ஆண்டு ஜூலை முதல் கேளிக்கை விடுதிகள் மற்றும் உணவகங்களில் புகைப்பிடிக்கத் தடைச் சட்டம் அமுலுக்கு வருகிறது.

அதேபோன்று ஒக்ரோபர் முதல் பஸ் நிறுத்தங்கள், நிழற்குடைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள், கழிவறைகளில் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சிகரெட் விலையை அதிகமாக்கியதுடன் பக்கெற்றுகளில் நோய்வாய்ப்பட்ட குழந்தை, நோய் தாக்கிய உடலுறுப்பின் படத்தை அச்சிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கட்டடம் மற்றும் குடியிருப்புகளில் புகைப்பிடிப்போருக்கு தனி இட வசதியும் புகையை வெளியேற்ற சிறப்பு வசதியும் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் மொத்த மக்கள் தொகை 42 லட்சம். கடந்த 1992 ஆம் ஆண்டு 18 சதவீதமானோர் புகைப்பிடித்தனர். தற்போது அது 14 சதவீதமாக குறைந்துள்ளது. இளம் பெண்களிடம் அங்கு புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது.

பொது இடங்களில் புகைப்பிடிப்பதை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் அயர்லாந்து தடைசெய்தது. பூட்டான் நாட்டில் புகையிலைப் பொருள்களின் விற்பனை முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மாதவனுக்கு திடீர் தடை?

சென்னை,ஓக.4

தமிழ்ப் படங்களில் நடிக்க மாதவனுக்கு திடீர் தடை விதித்துள்ளது தமிழ்த் திரைப்படத் தயாரிப் பாளர் சங்கம்.

தயாரிப்பாளர்கள் நியாயமாக நடப்பதில்லை என ஒரு பத்திரிகைக்கு பேட்டியளித்திருந்தார் மாதவன். இது தொடர்பாக தயாரிப்பாளர் சங்கத்தில் மாதவன் மீது சில தயாரிப்பாளர்கள் புகார் அளித்தனர். இதனைத் தொடர்ந்தே திரைப் படத் தயாரிப்பாளர் சங்கம் இந்தத் தடையை விதித்துள்ளது.

அவர் நடித்துவரும் 'தம்பி' படத்திற்கு எதுவித தடையும் விதிக்கவில்லை.

# சதாம் வழக்கில் முட்டுக்கட்டை

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனைத் தாக்கியவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தும் வரை நீதிமன்ற விசாரணைகளில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லையென சதாமின் சட்டத்தரணி அறிவித்துள்ளார்.

ஈராக்கிலுள்ள விசேட நீதிமன்றமொன்றில் சதாம் மீது குர்திஷ் மற்றும் ஷியா இன மக்களைக் கொன்றமை தொடர்பான விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணை நடந்த சந்தர்ப்பத்தில் இனந்தெரியாத நபரொருவர் சதாமைத் தாக்கினார் என சதாம் ஆதரவு சட்டவல்லுநர்கள் தெரிவித்தனர். ஆனால், அதனை ஈராக் அதிகாரிகள் மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் மீண்டும் சதாமைத் தாக்கிய நபரை நீதிமன்றில் ஆஜர்செய்தால் மட்டுமே தாம் தொடர்ந்தும் விசாரணைகளில் கலந்துகொள்வார் என சதாமின் சட்டத்தரணி கூறியுள்ளார்.

# பிதிர்த்தர்ப்பணம் செய்ய வில்லூன்றியில் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.4

வில்லூன்றி புனித தீர்த்தமும் ஆடி அமாவாசைப் பெருவிழாவும் இன்று வியாழக்கிழமை வில்லூன்றி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம் பெறும்.

காலை 8 மணிக்கு தீர்த்த வாரி இடம்பெறும். தொடர்ந்து பொது மக்கள் தீர்த்தமாடி பிதிர்த்தர்ப்பணங்கள் செய்ய விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-204)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ் ⇆ கொழும்பு | யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு


# ஆடிஅமாவாசை தீர்த்தமாட இறைவன் காட்டிய கருடமடு

*வன்னிப் பிரதேசத்தில் ஆடி அமாவாசை விரதமனுஷ்டிப்போர் தீர்த்தமாடி பிதிர்க்கடன் தீர்க்கும் தலமாக விளங்குகிறது கருடமடு விநாயகர் ஆலயம். இந்தத் தலத்தின் சிறப்பை விளக்குகிறது இந்த ஆக்கம்.*

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றாக ஆடிஅமாவாசை விரதம் அமைந்துள்ளது. தந்தையை இழந்தவர்கள் பிதிர்க்கடன் நிறைவேற்ற ஆடி அமாவாசை தினத்தில் விரதம் அனுஷ்டிக்கின்றனர். ஆதிகாலத்தில் வன்னிப் பிரதேசத்தில் வசித்த மக்கள் ஆடிஅமாவாசை விரதத்தை அனுஷ்டிக்க யாழ்.மாவட்டத்திலுள்ள கீரிமலை சென்று தீர்த்தமாடிவந்தனர்.

அப்போது ஒட்டுசுட்டான் சிவன் ஆலய தர்மகர்த்தா ஆடி அமவாசை விரத தினத்தில் கீரிமலை செல்லஇயலாத நிலையில் மனம்வருந்தி சிவனை நினைத்தவாறு இரவு படுக்கைக்குச் சென்றாரெனவும்-

சிவபெருமான் அவரது கனவில் தோன்றி கீரிமலை செல்ல முடியாததையிட்டு மனம்வருந்த வேண்டாமென்று கூறி கருடன் அமைத்த நீர்த்தேக்கத்தில் தீர்த்தமாடி தன்னை வணங்கும்படியும் - அருளினார்.

அன்றைய காலம் தொடக்கமே ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயிலில் இருந்து சுவாமி தீர்த்தமாட ஆடி அமாவாசை தினத்தில் கெருட தீர்த்தம் சென்றுவருவது வழக்கமாகிவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் இருந்து புதுக்குடியிருப்பு ஊடாக மாத்தளன் செல்லும் வீதியில் 5 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. கருடமடு விநாயகர் ஆலயம்.

இவ் ஆலயத்திற்கு அருகில் கருடமடு நீர்த்தேக்கம் காணப்படுகின்றது. விஷ்ணுவின் வாகனமான கருடன் அலகால் கீறியபோது நீர் ஊற்று வந்ததால் இந் நீர்த்தேக்கம் கருடமடு எனப் பெயர்பெற்றது என்று நம்பப்படுகிறது.

ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிக்கும் பக்தர்கள் அன்றைய தினம் விரதம் இருந்து ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து அமாவாசை நாளுக்கு முதல்நாள் புறப்படும் சுவாமியுடன் கால்நடையாக கருடமடு செல்வர். கருடமடு ஆலயத்தை அடையும் சுவாமி அன்று இரவு பூசை நடைபெற்ற பின்னரும் விடியும்வரை விநாயகர் ஆலயத்தில் தங்கி விடிந்த பின்னர் அமாவாசை கூடும் நேரத்தில் கருடமடு நீர்த்தேக்கத்தில் தீர்த்தமாடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மு.சிவநேசன்
கிராம அலுவலர்
கனகரத்தினபுரம்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் 6 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சண்முகம், கட்டுடை, மானிப்பாய். T.P.:0777 293043, 021 4591037 (38419)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு அருகில் 5 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3053011. (38299)

அரியாலை மத்திய விளையாட்டு மைதான திற்கு அண்மையிலும் கண்டிவீதிக்கு அருகிலும் அமைந்த கிணற்றுடன் கூடிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 222 3425 அல்லது 021 4590302.(38465)

## வாடகைக்கு

யாழ்.நகருக்குள் மேல் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. (கந்தோர் பாவனைக்கு மட்டும்) தொடர்பு: 021-222-3239. (38496)

## தவறிவிட்டது

வரணியைச் சேர்ந்த திவ்யராஜன் என்ப வருடைய (கனடாவிலிருந்து கொண்டு வந்த) புகைப்படங்களும் C D க்களும் அடங்கிய 'சொப்பிங்' பை யாழ். பொது நூலகத்துக்கும் சத்திரத்துச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.மத்திய கல்லூரியில் கமலசேகரத்திடம் ஒப்படைத்து உதவவும். T.P.: 4591617 (38472)

## மணமகன் தேவை

கனடாவிலிருந்து வந்திருக்கும், கனடா அரசில் தொழில்புரியும் சிற்றிசனுடைய 1963இல் பிறந்த, பாவம் குறைந்த, கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த, அழகிய, கௌரவ குடும்ப மணப்பெண்ணுக்கு வரன் தேவை. தொடர்பு: இ.சிவபாதசேகரம், 115, தொடருந்து நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (38430)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் U.K. இல் குடியுரிமையுடைய, 1973 கார்த்திகை, இடப ராசி, 2இல் செவ்வாய், 21 ¼ கிரகபாவம், 5' 11" உயரம், B.Sc.Computer படித்த மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: திரு. S.K. சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர்T.P.: 021-222 7844. (38486)

சுத்த போசன கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 46 வயது பிரபல வர்த்தகருக்கு 36 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 021 222 7217. (38494)

## தொலைக்கல்வி

யாழ்ப்பாணம்,ஓக.4

தொலைக்கல்வி ஆசிரியப் பயிற்சியைப் பூர்த்தி செய்து இதுவரை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாத ஆசிரியர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற உடனடியாக விண்ணப்பிக்குமாறு தேசிய கல்வி நிறுவனத்தின் தொலைக் கல்வி நிறுவக்த்தின் தொலைக்கல்விப் பிரிவு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-204)

## பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சிவலோசன் பெண் அவற் ராஜேஷ்,
உரும்பிராய் சிவன் வீதி, உரும்பிராய்.

வழ.இல.மணநீக்கம்/ 560 வழக்காளி

எதிர்

சிங்கராசா சிவனேசன்,
தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கு,
தற்போது ஜேர்மனி

எதிராளி

இவ்வழக்கு 2005 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாயிருக்க இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டு அழைப்புக் கட்டளை பதில் சேவகம் செய்யப்பட்டுத் திரும்பும் திகதியாகிய 14.06.2005 இலும் மன்று பத்திரிகை பிரசுரிப்பதற்காக திகதியிடப்பட்டிருந்தும் எதிராளி மன்றில் சமுகமில்லாது இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமித்து இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு மன்றின் அனுமதியுடன் இன்று வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்திய பின்னர் வழக்காளியின் பிராது வ1 ஆவணம் வழக்காளி மன்றுக்கு அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக் கப்படுகிறது.

எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையில் 1999ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்தார் என்ற குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை பிரதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்துதல் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராத விடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

*2005 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28 ஆம் திகதி.*

வரைந்தது
லிங்காதுரை
வழக்காளியின் சட்டத்தரணி.

மாவட்ட நீதிபதி
இ.த.விக்னராஜா
நீதிமன்றின் கட்டளைப்படி
ஆ.சிறீமோகன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

(38501)(21-19-18-39)

## இரு மொழிப்பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.4

தேசிய மட்டத்தில் நடைபெற்றுவரும் இளைஞர் யுவதிகளுக்கான இருமொழி இலவசப் பயிற்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இன்று சிங்கள மொழி பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெற உள்ளது. இதில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக பிராந்திய ஆணையாளர் பி.சிவலிங்கம், யாழ். பிரதேச செயலர் ம. பற்றிக்டிறஞ்சன், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் என் பேரானந்தம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-ரி)

## போட்டிகள்

வடமராட்சி,ஓக.4

புலோலி மேற்கு கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 31 ஆவது ஆண்டு விழாவை யொட்டிய விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறஉள்ளன.

காலை நிகழ்வாக 25மைல் ஆண்களுக்கான சைக்கிளோட்டப்போட்டி, 10 மைல் மரதன் ஓட்டப்போட்டி என்பனவும் பிற்பகல் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கரபந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், கிறிஸ்கம்பம் ஏறுதல் போன்ற போட்டிகளும் இடம் பெறும்.

(173)


# மிருதங்க சமர்ப்பணம்

லண்டன் "ஆவர்த்தனா" முதல்வர்
'கலாவித்தகர்' பரமசாமி கிருபாகரன் அவர்களின் மாணவன்

செல்வன் யதீசன் செல்வகுமார்

காலம்: 06.08.2005 சனிக்கிழமை பி.ப.4.30 மணி
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
தலைமை: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பணிப்பாளர், ஊ.வ.பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## நிகழ்ச்சிநிரல்

மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்
மௌனஅஞ்சலி
குருஆசீர்வாதம்
வரவேற்புரை - திரு.த.பஞ்சலிங்கம்
(சி.து.பொதுச்செயலாளர் இ.த.ஆசிரியர் சங்கம்)
தலைமையுரை - தலைவர்
ஆசியுரை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
வாழ்த்துரை - 'கலாபூஷணம்' க.ப.சின்னராசா
வயலின் இசை - செல்விகள் ரம்மியா கிருபானந்தன், சிந்துஜா கிருபானந்தன்

### மிருதங்க சமர்ப்பணத்தின் அணிசெய் கலைஞர்கள்

பாட்டு - "கலாசூடாமணி" எஸ்.சண்முகராகவன்
வயலின் - திரு.எஸ்.திவாகரன்
மிருதங்கம் - செல்வன் யதீசன் செல்வகுமார்
கஞ்சிரா - திரு.கே.அனந்தமோகன்
கடம் - திரு.என்.மாதவன்
தம்புரா - செல்வி கவினாலி ஸ்ரீஸ்கந்தராஜா

நிகழ்ச்சித் தொகுப்பாளர் திரு.வி.ரி.இராஜேந்திரா

கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

31, PEBWORTH ROAD,
HARROW,
MIDDX HA 1 3 VD,
U.K.

கலாநிதி செ.செல்வகுமார்
திருமதி செ.சௌந்தரவல்லி

(38490)(42-19-18-21)



GREEN INN RESTAURANT

எம்மிடம்
★ சைவ உணவு ★அசைவ உணவு ★ சிக்கன் பிரியாணி
★ பிரைட் ரைஸ் + டெவல் ★ மட்டன் பிரியாணி போன்றவை
பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது ரெஸ்ரோறண்டில் குடும்பமாக வந்து அமர்ந்து சாப்பிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
No.60, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel.:021 222 3896, Fax: 021 222 2298. Mobile:0776- 917030
Available A/c & Non A/C Rooms
With Attached Bathrooms.
(38421) (21-19-18-24)



## கருமாரி அம்மன் ஜோதிடம்





ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில். வியாபாரம். கல்வி. கணவன்-மனைவி ஒன்று சோதல். வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்கால பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன், அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(21.18.19)


உ
சிவமயம்

## பருத்தித்துறை - புலோலி
### பசுபதீஸ்வரர் ஆலய 7ஆம் திருவிழா

சிவன் அடியார்களே!

இன்று (04.08.2005) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பம். நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை நவசக்தி அர்ச்சனை நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும்நிகழ்வில் கலந்துஎம்பெருமானின் திருவருள் பெற்றுய்யும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- 7ஆம் திருவிழா உபயகாரர்.

செட்டித்தெரு, பருத்தித்துறை. (சி-44198)(21-18-19)


# S.L.A.S

இலங்கை நிர்வாக சேவைக்கு
ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

## வழிகாட்டி நூல்

- பொது விவேகம்
- பொது அறிவு
- கட்டுரையும் சுருக்கி எழுதுதலும்
- கடந்த கால வினா - விடைகள்
- எதிர்பார்க்கை வினா-விடைகள்

ஆசிரியர்: P. உமாசங்கர்
விலை - 200/-
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 6693
(சி-44196)(21-18-19)


## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி சந்திரகுமாரி கதிரவேலு
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி கதிரவேலு இரத்தினம்


அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/நவாலி மகாவித்தியாலயம்,
மானிப்பாய். (38495) (21-18-19-42)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 - 07 - 1981



உதிர்வு
08 - 08 - 2002

# இராசையா கிருஷ்ணபவான்

மூன்று ஆண்டுகள் ஆனாலும் எம் துயரம் ஆறவில்லை!
எங்கள் மனதிலே நிறைந்திருக்கும்
எங்கள் அன்புக் கண்ணாவின்
இனிய நினைவுகளோடு வாழும்...

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அத்தான், அண்ணி.

அல்வாய் தெற்கு,
அல்வாய். (38500) (39-21-19-18)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஹெல்கிஸனின் விஜயத்தின் பின்னணியில்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இரு தரப்புகளுக்கும் இடையில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், நான்கு நாள் விஜயமாக இன்று இலங்கை வருகின்றார்.

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை - சந்தர்ப்பங்களை - பரிசீலிப்பது, ஆழிப்பேரலை அவலத்தில் பாதிப்புற்றோருக்கான நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளைக் கவனிக்கும் நோக்குடன் உடன்பாடு காணப்பட்ட பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த வைப்பது, முறிந்துவிடக்கூடிய ஆபத்து நிலையில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டை ஸ்திரப்படுத்துவது, சர்ச்சைக்குரியதாக இருக்கும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது என்று வழமையான பணிகளே ஹெல்கிஸனின் இந்த விஜயத்தின் நோக்கங்களாகக் கூறப்படுகின்றன. ஆனால், இதற்கு அப்பாலும் இந்த விஜயத்தில் சில முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளமையை நாம் கவனிக்க வேண்டும்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் என்ற முறையில், இந்த அனுசரணைப் பணியைக் கையாள்வதற்கு இலங்கைக்கு அவர் மேற்கொள்ளும் கடைசி விஜயமாகக்கூட இது அமையக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வேயில் இது பொதுத்தேர்தல் காலம். செப்ரெம்பர் 12ஆம் திகதி - அதாவது இன்னும் ஒன்றரை மாதத்தில் - அங்கு பொதுத்தேர்தல் நடக்கப்போகின்றது.

தற்போது ஆட்சியிலிருக்கும் வலதுசாரி கான்ஸர்வேட்டிவ் மற்றும் லிபரல் கட்சி - கிறிஸ்தவக் கட்சிகளின் கூட்டமைப்பு இத் தேர்தலில் பின்னடையக் கூடிய வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன என அவதானிகள் கூறுகின்றனர்.

அந்த நிலைமை ஏற்பட்டால் கடந்த மூன்று, நான்கு வருடங்களாக நோர்வேயின் அனுசரணைப் பணியில் அந்நாட்டின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் என்ற முறையில் ஜான் பீற்றர்ஸன்னும், பிரதி வெளிவிவகார அமைச்சர் என்ற முறையில் விடர் ஹெல்கிஸனும் பங்கு பற்றி வந்த நிலைமையில் மாற்றம்வரும்.

விடர் ஹெல்கிஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் பதவியை இழந்தால் கூட, நோர்வேயில் வெளிவிவகாரத் துறையில்அவரது பங்களிப்பு, அனுபவம், செல்வாக்கு ஆகியவை கருதி அந்நாட்டின் வெளிவிவகாரத்துறை அவரது சேவையை வேறு பதவி நிலையில் அவரைப் பேணி தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் என்றும், அதேசமயம் இலங்கை இனப்பிரச்சினைக்கான அனுசரணைப் பணியிலும் அவர் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்றும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அனுசரணைப் பணியில் நோர்வேயினால் விசேடமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் எரிக் சொல்ஹெய்ம் கூட அத்தகைய முறையில்தான் தமது பங்களிப்பைத் தற்போது ஆற்றிவருகின்றனர்.

நோர்வேயின் முன்னைய அரசில் முக்கிய பிரமுகராகவும், வெளிவிவகார விடயங்களைக் கையாளும் முக்கியஸ்தராகவும் இருந்த எரிக் சொல்ஹெய்ம் அப்போது இலங்கை அனுசரணைப் பணிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் சார்ந்திருந்த அரசு பதவியிழந்து அவரது கட்சி எதிரணிக்குச் சென்ற பின்னரும்இலங்கை அனுசரணைப்பணியில் அவர் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டார்; ஈடுபடுத்தப்படுகின்றார்.

அதேபோல, விடர் ஹெல்கிஸன் பதவியிழந்தாலும் கூட அவர் இலங்கையில் அனுசரணைப் பணியில் தொடர அதிக வாய்ப்புகள் உள்ளன.

அதேசமயம், தமது நாட்டின் பொதுத் தேர்தலில், தாம் முன்னர் தலைமைவகித்த இடதுசாரி சோசலிஸ்ட் கட்சிக்காக முழு அளவில் பிரசாரம் செய்வதில் இறங்கியிருக்கிறார் எரிக் சொல்ஹெய்ம். இதற்காக இலங்கை விடயத்தில் தாம் வகிக்கும் அனுசரணைப் பணியிலிருந்து ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் தேர்தல் நடைபெறும் செப்ரெம்பர் 12 ஆம் திகதிவரை உத்தியோகபூர்வமாக விடுப்பில் சென்றிருக்கிறார் அவர். அவரது கட்சியும், பசுமை பேணுவதை வற்புறுத்தும் 'சென்ட்ரல்' கட்சியும் பிரதான கட்சியான தொழிற்கட்சியோடு அமைத்திருக்கும் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் எரிக் சொல்ஹெய்ம் புதிய வெளிவிவகார அமைச்சராவார் என்றும் கருத்துகள் வெளியாகியுள்ளன.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் இலங்கை விடயத்தில் நோர்வேயின் அனுசரணைப் பணியை - பங்கை - ஆற்றுகின்ற பிரமுகர்களின் தர நிலையில் மாற்றம் வருமே தவிர, நோர்வேயின் பங்களிப்பில் மாற்றம் ஏதும் வராது. இதனையே தமது தற்போதைய இலங்கை விஜயத்தின் போது இலங்கை அரசுத் தரப்புத் தலைவர்களுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் விடர் ஹெல்கிஸன் மேலதிகமாக எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு ஒஸ்லோ திரும்பும் வழியில் அடுத்த திங்கட்கிழமை (8 ஆம் திகதி) லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கும்போதும் இந்த விடயத்தைக் ஹெல்கிஸன் பாலசிங்கத்திடம் தெரியப்படுத்தக்கூடும்.

இலங்கையிலும் அதிகார மற்றும் ஆட்சி மாற்றங்களுக்கான தேர்தல்கள் எந்நேரமும் - விரைவில் - நடக்கலாம் என்ற அரசியல் சூழ்நிலையே நிலவுகின்றது. இவ்வாறு அதிகாரத்திலும், ஆட்சியிலும்ஆள்கள் மாறினால், அவர்கள் இலங்கை சமாதான முயற்சிகளிலும், நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பிலும் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், எதிர்பார்ப்புகள் குறித்து சம்பந்தப்பட்டோரோடு முற்கூட்டியே உரையாடி அவர்களின் கருத்தை அறிந்துகொள்வதும் ஹெல்கிஸனின் இந்த விஜயத்தின் நோக்கமாக இருக்கும்.எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் பார்த்தால் அவரின் இந்த விஜயம் சமாதான முயற்சிகளில் உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும் நீண்டகால நோக்கில் முக்கியமானதாக அமைகிறது என்பது திண்ணம்.

# தம்புள்ளவில் சர்வதேச விமான நிலையம்; இடம் தெரிவு, ஆய்வுப்பணி ஆரம்பம்

கொழும்பு,ஓக.4

தம்புள்ளப் பிரதேசத்தில் புதிய சர்வதேச விமான நிலையத்தை அமைப்பதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இத் தகவலை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு மேலும் ஒரு சர்வதேச விமான நிலையத்தின் தேவை உணரப்பட்டுள்ளது. முக்கியமாக உல்லாசப் பயணிகளின் நகரமாகப் பிரபல்யமடைந்துள்ள தம்புள்ளப் பிரதேசத்தில் விமான நிலையம் ஒன்றை அமைக்க யோசனை தெரிவித்துள்ளேன்.

புதிய விமான நிலையம் அமைப்பது தொடர்பாகப் பொருத்தமான நிலப் பிரதேசமொன்று ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அப்பிரதேசம் தொடர்பாகத் தனிப்பட்ட முறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம்- என்று அமைச்சர் ஜனக்க பண்டார மேலும் தெரிவித்தார். (ஜ-206)

### மீள்குடியமர்வு தொடர்பான
# வயோதிப மாதுவின் கோரிக்கை இராணுவத் தரப்பால் நிராகரிப்பு

மண்டைதீவு,ஓக.4

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தனது வீட்டில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு வயோதிபப் பெண்மணி ஒருவர் விடுத்த கோரிக்கை இராணுவத் தரப்பால் நிராகரிக்கப்பட்டது.

பாஷையூர் கடற்கரை வீதியில் உள்ள வீட்டின் உரிமையாளரான பாவிலுப்பிள்ளை கிறிஸ்ரீனம்மா என்ற பெண்மணியே இக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இவரது வீடு உள்ள கடற்கரை வீதியை படையினர்உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இதேவேளை அவ்வீதியில் உள்ள சில கட்டடங்களை அவற்றின் உரிமையாளர்கள் பின்புறப் பாதையைப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் படையினர் விடுவித்துள்ளனர்.

இந்நிலையில் தனது வீட்டையும் படையினர் விடுவிக்க வேண்டும் அல்லது மற்றவர்களைப் போன்று அதனைப் பயன்படுத்த மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கிறிஸ்ரீனம்மா பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பாஷையூரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படையணிப் பொறுப்பதிகாரியைப் பணித்திருந்தது. இதனையடுத்து இராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்டவரின் வீட்டை அண்மையில் பார்வையிட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக கொழும்பில் உள்ள இராணுவ தலைமையகம் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்:-

உயர்பாதுகாப்பு வலயத்தில் இந்த வீடு இருப்பதால் அதனை விடுவிக்க முடியாததென்றும் -

உரிய ஆவணங்களை வீட்டின் உரிமையாளர் சம்பந்தப்பட்ட இராணுவ சிவில் உத்தியோகத்தரிடம் சமர்பித்தால் அந்த வீட்டிற்கான வாடகையை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-88)

## சந்நிதியில் நாளை கொடியேற்றம்

வடமராட்சி,ஓக.4

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

காலைத்திருவிழாக்கள் காலை 8 மணிக்கும் மாலைத் திருவிழாக்கள் பிற்பகல் 4.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

பெருந்திருவிழாவையொட்டி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் விசேட போக்குவரத்து வசதிகளும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, வல்வெட்டித்துறை நகரமன்றம் ஆகியன இணைந்து சுகாதார குடிதண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சுற்றாடலில் உள்ள மடங்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படவுள்ளன.

(ஒ-173)

# மாகாணப் பாடசாலை மாணவர் அனுமதி தொடர்பான சுற்றறிக்கை வெளியீடு

அச்சுவேலி,ஓக.4

மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்பில் அடுத்த வருடம் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான வரையறைகள் கொண்ட அறிக்கையினை பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அனுப்பிவைத்துள்ளார்.

பாடசாலைகளில் உள்ள வெற்றிட எண்ணிக்கையை விட உரியதினத்தில் கிடைத்த விண்ணப்பங்களின் தொகை கூடுதலாக இருந்தால் கீழ்வரும் வகைக்குரிய விகிதாசாரத்திற்கு ஏற்ப மாணவர் தெரிவுசெய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதான குடியிருப்பாளரின் பிள்ளைகள் - 40 வீதம், பழைய மாணவரின் பிள்ளைகள் - 25 வீதம், தற்போது பாடசாலையில் கல்விகற்கும் பிள்ளைகளின் சகோதரர்கள் - 15 வீதம், இடமாற்றம் பெற்று பாடசாலை இருக்கும் பிரதேசத்தில் வசிப்பதற்கு வந்துள்ள அரச அலுவலரின் பிள்ளைகள் மற்றும் கடமை காரணமாக தமது சொந்த வதிவிடத்திற்கு வெளியே வசிப்பதற்கு நேரிடும் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் பிள்ளைகள் - 7 வீதம், பிரதான குடியிருப்பாளர் அல்லாதோரின் பிள்ளைகள் 7 வீதம், பாடசாலை கல்விசார் பணியில் இருப்போரின் பிள்ளைகள் - 4 வீதம் வெளிநாட்டில் இருந்துவிட்டு வந்தவர்களின் பிள்ளைகள் - 2 வீதம் என வரையறைசெய்து அதிபர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதலாம் தர மாணவர் அனுமதி தொடர்பாக முறைகேடுகள் நடைபெறுவதாக அமைச்சுக்கு செய்யப்பட்ட முறையீட்டையடுத்தே இச் சுற்றறிக்கை கைநூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஜூலை 31ஆம் திகதி விண்ணப்பங்களை ஏற்பதற்கான இறுதித் தினம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தற்பொழுது ஓகஸ்ட் 20 ஆம் திகதிவரை விண்ணப்பங்களை ஏற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

# கொழும்பில் பிரபல கட்டடத் தொகுதி உரிமையாளருக்கு தெரியாமலேயே விற்பனை

### பொலீஸ்மா அதிபர் வெளியிடும் திடுக்கிடும் தகவல்

கொழும்புக் கோட்டையில் பிரபலமான கட்டடங்களில் ஒன்றான கபூர் கட்டடத் தொகுதி உரிமையாளருக்குத் தெரியாமலேயே மோசடியான முறையில் விற்கப்பட்டுள்ளது. போலி ஆவணங்களைத் தயாரித்து இந்த மோசடி புரியப்பட்டுள்ளது என்கிறார் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ.

அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

கோட்டையில் உள்ள கபூர் கட்டடத் தொகுதி 119பேர்ச் நிலத்தில் அமைந்துள்ளது. அதில் 117பேர்ச் நிலம் அதன் உரிமையாளருக்குத் தெரியாமலேயே விற்கப்பட்டுள்ளது. கோட்டையின் மத்திய பகுதியில் ஒரு பேர்ச் நிலம் இன்று 35லட்சத்துக்கு விற்கப்படுகிறது. ஆனால், கபூர் கட்டடம் அமைந்துள்ள நிலம் ஒரு பேர்ச் பத்து லட்சம் வீதம் விற்கப்பட்டுள்ளது.

இந்த மோசடியைப் புரிந்துள்ளவர்கள் மேற்படி நிலத்துக்குரிய சகல ஆவணங்களையும் அதன் மூலப்பிரதியில் உள்ளது போன்றே புதிதாகத் தயாரித்துள்ளனர். போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்கு வேறு நபர்களே உரிமையாளர்கள் என்று கூறி இந்தமோசடி புரியப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுபோன்று கொழும்புப் பகுதியில் பல நிலங்கள் உரிமையாளர்களுக்குத் தெரியாமலேயே விற்கப்பட்டு மோசடிகள் பல இடம்பெற்றுள்ளன. எனவே, பொதுமக்கள் இதுவிடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்றார் பொலீஸ்மா அதிபர்.


(க)

### உதயவாக்கு

*சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள். - சுவாமி விவேகானந்தர்.*

### நாளை

ஆடி 20
வெள்ளிக்கிழமை
05.08.2005
திதி: அமாவாசை
முற்பகல் 9.11 வரை
நட்சத்திரம்:
ஆயிலியம் முழுவதும்
சுபநேரம்: 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34- 12.04
(யாவும்
பழைய நேரப்படி)



## ஒலி, ஒளி இசைத்தட்டு வெளியீடு

வலி.தெற்கு,ஓக.4

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய சிவஸ்ரீ சோமாஸ்கந்த உமாரமண சிவாச்சாரியரால் இசையமைக்கப்பட்டு பாடப்பட்ட "கற்பகத்தின் பொற்பாதம்" என்ற ஒலி , ஒளி இசைத்தட்டு மற்றும் வெளியீடு எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வை.பரமேஸ்வரன் தலைமை வகிப்பார்.

இதில் அறிமுக உரையை தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை பிரம்ம ஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரும், ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்துவர். (ஓ-152)


ஸ்ரீ காயத்திரீ தேவி ஜோதிட நிலையம்
பண்டித் சுவாமிநாதன்

உலகத்தில் உங்களுக்கு ஏற்படும் இன்பம்- துன்பம், நன்மை- தீமைகள் என்பவற்றை கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள்
கைரேகை, குடும்பத்தில் கணவன்- மனைவிக்கிடையே உள்ள பிரச்சினை, கல்வி, வீடு, நிலம், பூமி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வியாபாரம், இலட்சுமிகடாட்சம், திருமணம், குழந்தைப்பாக்கியம், காதல் விவகாரம், எதிரிகளினால் ஏற்படும் பிரச்சினை, ஆரோக்கியம், பிணி, நோவுகள், பணக்கஷ்டம், நீதிமன்ற வழக்குகள் ஆகிய சகல காரியமும் பார்க்கப்படும்.
சந்திக்கவேண்டிய நேரம் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை
தொடர்புகளுக்கு: A.S.N சுற்றுலா விடுதி, 392-392 A மணிக்கூண்டு வீதி (பெருமாள் கோவில் வீதி ).யாழ்ப்பாணம்.
T.P.NO: 021- 222 -5399 (38362)(51-16-34)


# காணாமற்போனோர் தொடர்பான பொலீஸாரின் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

குடாநாட்டில் 1996 -97ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் குறித்த விசாரணை நடத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைப் பிரிவு அதிகாரிகள் எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்.வரவுள்ளனர்.

இவர்கள் நடத்தும் விசாரணைகளுக்கு காணாமற்போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டாளர் ஆகியோரில் எவராவது இத்தகையோர் இடம்பெயர்ந்தோ, வெளிநாட்டிலோ வசிப்போராயின் அவர்களது உறவினர் சமுகமளிக்கலாம்.

காணாமற்போனவர் பெயர் விசாரணை நடைபெறும் பொலீஸ் நிலையம் மற்றும் திகதி ஆகியவை வருமாறு:-

**சாவகச்சேரி பொலீஸ் நிலையம்**
**09.08.2005 -10.08.2005.**

பத்மரூபன் ஞானசேகரம் -அரியாலை தெற்கு, மீசாலை. (கோவை - இல. 371), ரத்னம் கஜேந்திரன் - இல.49/A, நாகேந்திரபுரம், முறைப்பாட்டுக்காரர்- என்.ரத்னம் (கோ.இல.447), சத்தியவான் ரமேஷ், சாந்தகுகநாதன் மேல்பார்த்து, மிருசுவில், முறைப்பாட்டுக்காரர்- கே.சதீஸ்வரன். (கோ.இல.491), சின்னத்தம்பி சசீகரன், முகவரி குறிப்பிடப்படவில்லை- கைதுசெய்யப்பட்ட இடம் முல்லைத்தீவு. (கோ.இல. 570), சிவலிங்கம் ரமேஸ்வரா - இடைக்குறிச்சி, வரணி. (கோ.இல. 595), தம்பிதுரை துரைராஜா - 02, 21ஆவது ஒழுங்கை, முல்லி வீதி, அரக்கால்மடம். (கோ.இல.651), தேவசந்திரன் தேவன் - ஆனந்தநகர், கிளிநொச்சி, (கோ.இல.692), திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் - தனங்கிளப்பு, சாவகச்சேரி, (கோ.இல.704), ஸ்ரனிஸ்டன் ஜேசுதாசன் - வசந்தவாசகம், சுதுமலை கிழக்கு, சுதுமலை. (கோ.இல.615), பூபாலசிங்கம் பிரபாகரன் - கைதடி தெற்கு, கைதடி. (கோ. இல.346), சுகுமார் பூபாலசிங்கம் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (கோ.இல.631).

**அச்சுவேலி பொலீஸ் நிலையம்**
**11.08.2005-12.08.2005**

கார்த்திகேசு விஜயன் - செருக்கம்புலம், பண்டத்தரிப்பு (கோ.இல.216), நாகமணி அண்ணராசா - புலுன்குட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு, (கோ.இல.313), பசுபதி தயானந்தன் - செம்பியன்பற்று வடக்கு , யாழ்ப்பாணம். (கோ.இல.368), பொன்னு அழகரத்னம் - பளை, யாழ்ப்பாணம். (கோ.இல. 382), ராசதுரை சுதாகரன் - புலுன்குட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு, (கோ.இல.424). எஸ்.பாலகுமார் - கட்டைப்பிராய், யாழ்ப்பாணம் - முறைப்பாட்டுக்காரர் - ஜி.டி.பிலோமினா (கோ.இல.459), எஸ்.சபேசன் - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி - முறைப்பாட்டுக்காரர்- புஷ்பமலர், (கோ.இல.468). தர்மேஸ்வரன் காசிப்பிள்ளை - சுதா பேக்கரி வீதி, உரும்பிராய் (கோ.இல. 674), தேவேந்திரன் பாஸ்கரன் - சுன்னாகம், (கோ.இல. 688). சிங்கராஜா விஜயகோபால்- வித்தியாபுரம், அம்மன் கோயிலடி, சித்தன்கேணி, (கோ.இல. 557). சின்னத்தம்பி சயந்தன் - சுழிபுரம் மேற்கு, சுழிபுரம், (கோ.இல. 579), செல்லத்துரை குணரத்னம் - சுழிபுரம் மேற்கு, சுழி புரம். (கோ.இல.519).

**வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையம்**
**13.08.2005-14.08.2005**

மகேஸ்வரன் மாணிக்கம்-ராஜகிராமம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (கோ.இல.252), எஸ்.அம்பிகாவதி - ஏரகம்பத்தை, வல்வெட்டித்துறை- முறைப்பாட்டுக்காரர்- ஜயந்தி அம்பிகாவதி (கோ.இல.458), தங்கராஜா குணசீலன் -பூவக்கரை, வியாபாரிமூலை, பருத்தித்துறை முறைப்பாட்டுக்காரர்- ஜி.கல்பனா (கோ.இல.657), தர்மலிங்கம் சுவர்ணசீலன் - வதிரி, கரவெட்டி (கோ.இல.671), தில்லையம்பலம் யசோதரன் - சுவர்தவாசா தும்பளை, அளவெட்டி. முறைப்பாட்டுக்காரர் - காந்தீபன், (கோ.இல.697), சின்னதம்பி துணுக்கன் - திலீபன் செல்லத்துரை - மேல் பார்த்து கரணவாய் மேற்கு, கரவெட்டி. (கோ. இல.563), எஸ்.சிவாதரி - ஏழாலை மேற்கு, ஏழாலை, (கோ.இல.466), எஸ்.செல்வரஞ் சன் - இல. 25/7, கோப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (கோ.இல.471).


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பீ.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

Rediffusion DYR 497/11/04


## புலோலி ச.ச.நிலைய பொன்விழா

வடமராட்சி,ஓக.4

புலோலி வடமேற்கு முருகன்கோயிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் பொன்விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று வியாழக்கிழமை, பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கலந்துகொள்வார்கள். (173)


திருமணக்கார் வாடகைக்கு

திருமணம், சுற்றுலா ஏனைய தேவைகளுக்கு வெள்ளைநிற, சில்வர் நிற புத்தம் புதிய (குளிரூட்டப்பட்ட) நவீன கார் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். (38403) (33-16-34)
தொடர்பு:-
சிவா வீடியோ லைபிறறி,
இராமலிங்கம் வீதி, முடமாவடி, (பூங்கனிச்சோலை அருகில்), திருநெல்வேலி கிழக்கு.

ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை

25% வரை விலைக்கழிவு

OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

# அறப்பணியை முன்னெடுக்க உருவான 'ரிசிரி' அங்காடி


தியாகி அறக்கொடை நிறுவனம் ஆற்றி வரும் அறப்பணிகளில் நிதிப்பங்காற்றலை வளப்படுத்துவதற்காகத் தோற்றம் பெற்றது ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் (சூப்பர் மார்க்கெற்).

வர்த்தகத்துறையில் முன்னேற்றத்தைக் கண்டுவரும் யாழ்.நகரில் சூப்பர் மார்க்கெற்றின் தேவையை உணர்ந்து யாழ்.நகர் வர்த்தக மையத்தை அண்டியதாக யாழ்.நாவலர் வீதியில் அண்மைக்காலத்தில் தியாகி அறக்கொடை நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்.

அந்த நிலையத்தின் உருவாக்கம் பற்றியும் அதன் துரித வளர்ச்சி பற்றியும் தியாகி அறக்கொடை நிறுவன நிர்வாகசபை அங்கத்தவர் செ.கமலநாதனுடன் கலந்துரையாடியவற்றை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.



வாமதேவா தியாகேந்திரம் (தியாகி) தன் சமூகத்தின்மீது மிக அக்கறை கொண்டவர். புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்க நேர்ந்த போதும் தன் தாய் நாட்டின் மீதும் தன் சமூகத்தின் மீதும் அக்கறை கொண்டவராய் உருவாக்கியதே தியாகி அறக்கொடை நிறுவனம்.




சமூதாயத்தில் மிக வறிய நிலையில் வாடும் - கல்வியில் ஆர்வம் கொண்ட பிள்ளைகளுக்கு உதவி செய்தல், இலவச ஆங்கில வகுப்புகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி, தொண்டர் ஆசிரியர் ஊக்குவிப்பு உதவி, மருத்துவ முகாம்கள், சத்துணவு, புற்று நோயாளர்களுக்கு உதவி, தையல் பயிற்சி, சுயதொழில் முயற்சிக் கடன், சிறுவர் இல்லம் போன்ற பணிகளை இந்த அறக்கொடை நிறுவனம் நடத்திவருகின்றது.

இவற்றுக்கான நிதியினை ஆரம்ப நாளிலிருந்து நிறுவன ஸ்தாபகரே வழங்கி வந்தார். ஆயினும், நீண்ட காலச் சிந்தனையைக் கருத்தில் கொண்டு நிறுவனத்தின் நிதிச்செலவில் பங்காற்றக்கூடிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் திட்டத்தை நிறுவன ஸ்தாபகரும் நிர்வாகிகளும் முன்வைத்தனர்.

அதன்மூலம் உருவானதே ஆடை தயாரிக்கும் நிலையம், ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் என்பன.

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நிதியையும் நிறுவன ஸ்தாபகரான தியாகியே தந்துதவினார்.

இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட சில நாள்கள் நிர்வாகிகளும் ஊழியர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டனர். வியாபாரம் என்பது அவர்களுக்குப் புதியதுறை - பழக்கமில்லாத துறை. இத னால் ஆரம்ப நாள்களில் மிக வும் கஷ்ரப்பட்டனர். இதனால், வியாபாரம் சில நாள் களாக நட்டம்கூட ஏற்பட்டது. எறும்பூரக் கல்தேயும் என்பது போல ஊழியர்களும் நிர்வாகிகளும் பாடுபட்டதற்கிணங்க சில நாள்களிலேயே சீர்பெற்றது இந்த நிலையம்.

தொழில் நிமித்தமாக வெளியில் செல்பவர்கள் தமது வேலை முடிந்து வீடு திரும்பும் போதே வீட்டுக்குவேண்டிய பொருள்களைத் தொகையாக வாங்கிச் செல்கின்றார்கள். வேலை முடிந்து அலுப்புடன் வருபவர்களுக்கு ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கடைகடையாக ஏறிவாங்கும் பொறுமை மிக மிகக் குறைவே. இப்படியானவர்களுக்காக உருவாக்கப்பட்டதே சுப்பர் மார்க்கெற்.

ரிசிரியும் அந்த சிந்தனையை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. இந்த அங்காடியில் 12 ஊழியர்கள் பணி செய்கின்றனர். அந்த ஊழியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அதாவது, வறுமை நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்தே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு மிகக் குறைந்தளவான ஊதியமே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. நாளடைவில் அவர்களுக்குத் தேவையான போதிய ஊதியம் வழங்கப்படும் என நிர்வாகசபை உறுப்பினர் உறுதியளித்தார்.

தியாகி அறக்கொடை நிறுவனத்தில் நிர்வாக சபை அங்கத்தவர்கள் 8 பேர் உள்ளனர். அந்த அங்கத்தவர்களே ரிசிரியையும் நிர்வகித்து வருகின்றனர்.

ரிசிரியில் இன்னுமோர் குறிப்பிடக்கூடிய அம்சம் - வரவேற்கத்தக்க விடயம் - உள்ளூர் உற்பத்தியின் சந்தைப்படுத்தல். ரிசிரி நாளடைவில் ஏனைய உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டிருந்தாலும், தற்போது தான் சார்ந்த நிறுவனத்தின் தியாகி அறக்கொடை நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் கார்மென்ஸின் - உடைகளை சந்தைப்படுத்துவதில் பங்குவகிக்கின்றது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.



இந்த ரிசிரி தற்போது ஆரம்பிக்கப்பட்டு 8 மாதங்களே ஆகியுள்ளன. ஆயினும், அதன் வளர்ச்சி மிகத் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. கொழும்பிலுள்ள சுப்பர் மார்க்கெற்றின் தரத்திற்கு இதை உயர்த்துவதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அத்துடன், கண்காணிப்புக் கமெரா பொருத்துதல், காட் ,போட் டுப் பொருள்கள் எடுத்தல் போன்ற நவீன முறைகளும் அறிமுகப் படுத்தப்படும். ரி.சிரி யின் விற்பனையை மேம்படுத்தவும் மக்களிடையே அறிமுகத்தை ஏற்படுத்தவும் வெகு விரைவில் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளையும் நிர்வாகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**செவ்வி: தீபா**

காலத்தினதும் சமூகத்தினதும் மாற்றங்களையும் தேவைகளையும் அறிந்து அதற்கேற்ப வர்த்தகத்துறையை மேம்படுத்துவதில் நம் யாழ்.வர்த்தகர்களும் சளைத்தவர்களல்லர் என்பதற்கு உதாரணம் ரிசிரி என்றால் மிகையாகாது. ✱



இலங்கை வங்கியின் 18 + சேமிப்புத் திட்டத்தில் விசேட திருமணப் பரிசுத் திட்டத்தின்கீழ் வங்கியின் திருநெல்வேலிக் கிளையின் வாடிக்கையாளர்களான பொ.கிருபானந்தன் பிரதீபா தம்பதிகளுக்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் தங்கக் காசுகளைப் பரி சாக வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் அருகில் செயற்பாட்டு முகாமையாளர் பி.அருமைநாயகம், மாவட்ட முகாமையாளர் எஸ்.திருச்செல்வம், வங்கி முகாமை யாளர் க.பத்மநேசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ-100)

# கைத்தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி ஆலோசனைகள்

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பொருள்களில் 50 வீதம் தொடக்கம் 60 வீதம் ஆனவை சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களினாலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. அத்துடன், இப்படியான கைத்தொழில்கள் வேலைவாய்ப்பு, கைத்தொழில் ஊக்குவிப்பு, ஏற்றுமதி, மனிதவள அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தர உயர்வு போன்றவற்றுடன் நேரடியாகத் தொடர்புகொண்டிருக்கின்றன. இவை உற்பத்தியாளரை அவர்களுடைய உற்பத்திகள் நாடளாவிய ரீதியில் பிரபல்யமாகும் அளவிற்குத் தூண்டக்கூடிய வகையில் செயற்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களில் அநேகமானவை இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெரியசதவீதத்துடன் நேரடியாக மற்றும் மறைமுகத் தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. அதனால், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை ஊக்குவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உணவு மற்றும் மரதளபாட உற்பத்தி, ஆயுர்வேதப் பொருள்கள், உலோகமில்லாத தாதுப்பொருள்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் 60 வீதத்திற்கும் அதிகமான உற்பத்தியாளர்கள் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களாகவே அமைந்துள்ளனர். இருந்தபோதும், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் உற்பத்தியாளர்கள் தங்களுடைய குறிக்கோளை எட்டுவதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இதற்கு முக்கிய காரணங்களாக அமைவன:-

✱ நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்.

✱ திறமையான ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதில் உள்ள பிரச்சினைகள்.

✱ உற்பத்தியை அதிகரிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்.

✱ உற்பத்திக்கான சந்தைப்படுத்தும் வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்.

✱ உற்பத்திப் பொருள்களின் தரம், சந்தைப்படுத்தக்கூடிய பொருள்களின் ஆகக் குறைந்தளவு தரத்தை எட்டுவதற்கேற்ற முறையில், உற்பத்தி செய்வதில் எதிர்கொள்ளும் நிதிப் பற்றாக்குறை. அதனால் இந்த நிதிப் பற்றாக்குறைதான் உற்பத்திப்பொருள்களின் தரத்தைக்கூட்டுவதில் முக்கிய தடங்கலாக அமைந்துள்ளது.

இவை தவிர சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் மற்றைய பிரச்சினைகள்:-

✱ தொழில்நுட்பம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை.

✱ பொருள்களைத் தரநிர்ணயம் செய்ய முடியாமை.

✱ வர்த்தகம் சம்பந்தமான கண்காட்சிகள், பங்குபற்றக்கூடிய வாய்ப்புக்கள் போன்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்.

✱ சரியான திட்ட முகாமைத்துவமின்மை.

✱ சரியான கோப்புக்களைப் பாவித்தலும் அதனைப் பேணலும்.

✱ இலாபத்தை ஈட்டக்கூடியவகையில் திட்டத்தை உருவாக்கலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள சிக்கல்கள்.

✱ முழுக் கவனத்தையும் உற்பத்தியில் மாத்திரம் செலுத்துதல்.

✱ வேலையாள்களின் அசண்டையீனம்.

✱ திறமையான வேலையாள்கள் கிடைப்பதில் உள்ள சிக்கல்கள்.

✱ உள்ளக செயற்பாடுகளைக் கவனிக்கத்தக்க வகையில் சரியான கோப்புக்களைப் பேணாமை.

✱ இயந்திரங்கள் பற்றிய சரியான அறிவின்மை.

வலுவான நிதி முகாமைத்துவத்தைப் பேணாமை.

✱ உற்பத்திப்பொருள்களின் செலவீனம் நாளுக்குநாள் அதிகரித்தல்.

உதாரணமாக - ஓர் உற்பத்தி நிறுவனத்தின் நடவடிககைகளை சமநிலையில் வைத்திருப்பதற்குச் சரியான கோப்புக்கள் பேணப்பட வேண்டும். நாளுக்குநாள் மாறிக்கொண்டிருக்கும் ஊழியர்களின் விலக்கல்களைச் சமாளித்து தொடர்ந்து நிறுவனத்தை வெற்றிப்பாதையில் கொண்டுநடத்துவதற்குச் சரியான கோப்புக்களால் மாத்திரமே உதவிசெய்யமுடியும்.

சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டியவை:-

✱ பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அவற்றின் விலையின் அடிப்படையில்தான் தெரிவுசெய்கிறார்கள் என்ற கருத்தை தரத்தின் அடிப்படையில் தான் தெரிவுசெய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தவேண்டும்.

✱ ஏழை எளிய மக்களும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பொருள்களை வித்தியாசமான அளவுகளில் தரத்தில் உயர்ந்த முடிவுப்பொருள்களாக உருவாக்கவேண்டும்.

✱ வலுவான சந்தைப்படுத்தல் உத்திகளைக் கையாளவேண்டும்.

✱ உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்கள் தரமானவை என்ற கருத்தைப் பாவனையாளர்களின் வாய்ச்சொல்லில் இருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தங்களுடைய நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு:-

✱ தங்களுடைய மூலப்பொருள் வழங்குநர்கள் மற்றும் முடிவுப்பொருள் விற்பனையாளர்களுடன் சிறந்த நட்புறவைக் கொண்டிருக்க வேண்டும்.

✱ வியாபார நடவடிக்கைகளில் அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு உள்ளக ஆலோசகர்கள் அல்லது வெளி ஆலோசகர்களுடன்கூடி ஆலோசிக்கவேண்டும்.

✱ வியாபாரம் சம்பந்தமான ஆலோசனை வழங்கும் நிலையங்களுடன் வலுவான உறவைப் பேணவேண்டும்.

✱ உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான வழிமுறைகள் பற்றி அடிக்கடி ஊழியர்களுடனும் ஆலோசனை வழங்குபவர்களுடனும் கலந்தாலோசிக்கவேண்டும்.

✱ ஊழியர்களின் திறமை, நிறுவனத்தின் சாத்தியக்கூறு என்பவற்றைப் பொறுத்து புதிய தொழில்நுட்பத்தை அறிமுகஞ்செய்தல்.

✱ நிறுவனத்திற்காக ஆலோசனை வழங்கும் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட கோப்புக் கட்டமைப்புக்களைப் பயன்படுத்தல்.

**- வியாபார அபிவிருத்தி நிலையம்.** ✱

## Save the Children
in Sri Lanka

**We are looking for a committed & energetic individual to join our team as:**

**Field assistant - Livelihoods/ Construction/ Child Protection**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with the Partnership Management officers to contribute to the day to day running of SCiSL programs.

**Base Station**
**Jaffna**

**Qualifications and experience:**
**Essential**

- Graduate degree in Social Sciences or equivalent with preferably 3 years experience in development organizations.
- Understanding of development issues related to children.
- Ability to innovate along with a positive attitude to learn from communities.
- Good knowledge of written and spoken English with fluency in one or more of the local languages.
- Skills in report writing.
- Ability and willingness to travel to all parts of the country.
- Good personal and liaison skills.
- Possess valid driving license - Motor bike

**Desirable**
- Skills related to participatory methods, computer literacy
- Exposure to development interventions in the area of Child Rights.
- Experience in working with community
- Knowledge of third national language.

**A highly competitive remuneration package awaits the selected candidates.**

**Duration:**
The above position would be initially for a period of 01 year

The post will involve travel to other parts of the country. Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th August 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
Only short listed candidates will be contacted.

(C/44185)

## Save the Children
in Sri Lanka

**We are looking for a committed & energetic individual to join our team as:**

**Receptionist / Radio operator**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to assist and support the HR/Administrative Assistant in maintaining and running of the office.

**Base Station**
**Jaffna**

**Qualifications and experience:**
**Essential**
- Successfully completed A/L
- About 2 years work experience in a relevant post.
- Excellent interpersonal skills
- Skills related to computer literacy
- Good knowledge of written and spoken English and fluency in Tamil
- Good organizational skills
- Methodical in work
- Team Spirit

**Desirable**
- Knowledge of a Third Language

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**
The above position would be initially for a period of 01 year

Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th of August 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.

(C/44186)

## Save the Children
in Sri Lanka

**We are looking for a committed & energetic individual to join our team as:**

**Partnership Development Manger- Livelihoods**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with District Manager to contribute to the day to day running of SCiSL programs.

The Partnership Development Manager is responsible for the development implementations, and monitoring of programs to achieve SCiSL's mission through partner organizations. The Partnership Development Manager is also responsible for playing a proactive role in advocacy at different levels. The work involved includes program planning and management, budgetary responsibilities, management reporting and line management responsibilities.

**Base Station**
**Jaffna**

**Qualifications and experience:**
**Essential**
- Post Graduate degree in Social Sciences.
- About 5 years of experience in the area of development of livelihoods.
- Analytical skills and experience in project planning and field experience with program management.
- Experience in advocacy initiative.
- Skills related to computer literacy, financial management and report writing.
- Command of written and spoken English with fluency in one or more of the local languages.
- Ability and willingness to travel to all parts of the country.
- Strong interpersonal skills with special emphasis on managing teams.
- Skills related to training and capacity building of local partners.

**Desirable**
- Good understanding of government structures.
- Contacts within the NGO community, donor agencies and government departments.
- Previous experience with development interventions in the area of Child Rights.
- Knowledge of third national language

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**
The above position would be initially for a period of 01 year

The post will involve travel to other parts of the country. Please note that all positions in SCiSL are subject to transfer.
**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**
Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th August 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.

(C/44183)

## Save the Children
in Sri Lanka

**We are looking for a committed & energetic individual to join our team as:**

**Civil Engineer**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with District Manager to contribute to the day to day running of SCiSL programs.

**Base Station**
**Jaffna**

**Qualifications and experience:**
**Essential**
- Successfully completed B.Sc. civil Engineering with 5 year experience or about 10 years work experience with NDT or 15 years with others in construction of buildings and infrastructure development
- Preparation of bills of Quantities, estimates
- Construction management
- Excellent interpersonal skills
- Computer skills in Excel and Word
- Good in English and fluency in Tamil
- Good organizational skills
- Methodical in work

**Desirable**
- Knowledge of a Third Language
- Skills in Auto Cad

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**
The above position would be initially for a period of 01 year

The post will involve travel to other parts of the country. Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th August 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
Only short listed candidates will be contacted.

(C/44184)

# நமது எழுத்தாளர்களின் படைப்புகள் தமிழ் இலக்கியத்திற்கு வலுச்சேர்க்கின்றன

நல்லூர்,ஓக.4



மேலைத்தேச கற்கை நெறிகளினால் ஒரு காலத்தில் தமிழ் இலக்கியங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும், தற்போது தமிழ் இலக்கியங்களிற்கு வலுச்சேர்க்கும் எழுத்தாளர்களது படைப்புகள் வெளிவருவது பாராட்டுக்குரியது.

- இவ்வாறு ஆசிரியர் எஸ்.அடைக்கலம் எழுதிய சிறுவர் பாமாலை கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். பல்கலைக் கழகத் தமிழ் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் கூறினார்.

ஆசிரியர் எஸ்.அடைக்கலம் எழுதிய சிறுவர் பாமாலை கவிதைநூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. பேராசிரியர் எஸ். சண்முகதாஸ் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

நிறைய தமிழ் நூல்களை சமணர்கள் ஆக்கியுள்ளனர். பள்ளி என்ற சொல் அவர்களால் வந்தது. பெரியவர்களுக்குச் சொல்வதைவிட குழந்தைகளுக்குச் சொல்வது எளிது. கொன்றை வேந்தன், ஆத்திசூடி போன்ற நீதி நூல்கள் சிறுவர்களுக்காகப் படைக்கப்பட்டதே. இன்று அதைப் பெரியவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

ஒருகாலத்தில் தமிழ் இலக்கியத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. மேலைத்தேச கற்கை நெறிகளினால் தமிழ் இலக்கியங்களில் தொய்வும் உண்டானது.

கவிதை என்பது மிக எளிய நடையுடன் அமைந்து மக்களைச் சேரவேண்டும். பாரதியாரின் கவிதைகளும் அப்படியானதே. அன்று பாண்டியன், அறிவுடை நம்பி முதல் அடைக்கலம் வரை சிறுவர்களுக்காகப் பல பாடல்களைப் பாடியுள்ளனர் - என்றார்.

வலிகாமம் கல்விவலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பேசும்போது கூறியதாவது:-

பாடத்திட்டத்தில் இடம்பெறக்கூடியதாகச் சிறுவர் கவிதைகள் அமைவது எதிர்காலத்தின் தேவையாகும். சிறுவர்கள் கவிதைகளுடன் ஒன்றிவிடும் தன்மை பெற்றவர்கள்.

இன்று எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளை வெளியிடப் பாரிய சுமைகளை எதிர்கொள்கின்றார்கள். அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டியது எமது மக்களின் கடமை. நல்ல நூல்களைத் தரும் படைப்பாளிகள் பொருளாதாரச் சுமைகளுக்கு உட்படுவது ஆரோக்கியமானதல்ல.

அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த நூலைப் பெறுவதன் ஊடாக சுமைகளைக் குறைக்க முன்வரல் வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் சிறுவர்களுக்கான நூல்களை வாங்கிச் சிறுவர்களுக்கான நன்நெறிகளை கற்க உதவவேண்டும் - என்றார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

நாங்கள் இன்று சிறுவர்கள் பற்றிச் சிந்திப்பதில்லை. சிறுவர்கள் உரிமை குறித்துச் சிலர் பேசினாலும் சிறுவர்கள் இன்னமும் அடிமைகளாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இன்று பரீட்சையில் சித்தியடைவதே கல்வி என்றாகிவிட்டது. 4ஆம், 5 ஆம் ஆண்டு படிக்கும் பிள்ளைகள் நோய்க்கு உட்படுவதாக ஒரு வைத்தியர் என்னிடம் கூறினார். ஓடி விளையாடு பாப்பா என்றான் பாரதி. பிள்ளைகளுக்கு எங்கே ஓடி விளையாட நேரம் இருக்கிறது. பாடசாலைக்குப் போகாவிட்டாலும் கூட ரியூட்டறிகளுக்கு ஓடு என்று பெற்றோர்கள் பிள்ளைகளைத் துரத்துகின்றார்கள். மாலை முழுவதும் விளையாட்டு என்கிறார். ஆனால், அவர்கள் ரியூட்டறி விளையாட்டில் இருக்கிறார்கள். இவை குறித்து நாங்கள் சிந்திப்பது கிடையாது.

பிள்ளைகள் படிக்கும் நேரத்தை அவர்களே தீர்மானிக்கட்டும். அவர்கள் சுயமாகச் சிந்திக்க நாங்கள் விடவேண்டும். அடைக்கலம் இந்த நூலை வெளியிட மிகவும் கஷ்டப்பட்டிருப்பார். நூல்களை வெளியிட ஒரு நிறுவனம் தேவை. எழுத்தாளர்களுடைய கஷ்டம் அவர்களுக்குத்தான் தெரியும் - என்றார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். ஆயர் அதிவண. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கோப்பாய் ஆசிரியர் கல்லூரி முதல்வர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, எழுத்தாளர் யோ.செல்லப்பா, நூலாசிரியர் எஸ். அடைக்கலம் உட்படப் பலர் பேசினார்கள்.

நூலின் முதல்பிரதியை தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடமிருந்து ஐறின்யூலியா அருள்நாயகம் பெற்றுக்கொண்டார். (111)

# யாழ்.கல்வித்தரத்தை உயர்த்தாது விடில் அதன் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்

## மாணவர் அமைப்பின் யாழ்.பொறுப்பாளர் கவலை

யாழ்ப்பாணத்தின் கல்வித்தரத்தினை மீள்பரிசீலனை செய்து எமது மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் இன்னும் கொஞ்சக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் கேள்விக்குறியாக மாறிவிடுவதினை நாங்கள் யாருமே தடுத்து நிறுத்திவிடமுடியாது.

- இவ்வாறு தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரி அதிபர் ந.சபாரெட்ணசிங்கி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றிய மாணவர் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தினது கல்வித்தரம், கலை, கலாசார பண்பாடுகள் ஓங்கி வளர்ந்திருந்தன. உலகளாவிய ரீதியிலே யாழ்ப்பாணத்து சமூகத்திற்கு என்று ஒரு தனித்துவமான மதிப்பு இருந்துவந்தது.

யாழ்ப்பாணத்து மாணவர்கள் என்றால் அல்லது யாழ்ப்பாணத்தில் பயில்கிறோம் என்றால் வெளிமாவட்டங்களில் என்றாலும் சரி, வெளிநாடுகளில் என்றாலும் சரி ஒரு மதிப்பு இருந்தது. கல்வித்தரத்திலே முதன்மையான இடத்தினை பிடித்து வைத்தவர்களும் நாங்கள்தான். இன்றைய சம காலத்தில் எங்களுடைய மாணவர்களின் கல்வித்தரமும் ஒழுக்கங்களும் விழுமியங்களும் எங்குபோய் நிற்கின்றதென்பதை சிந்திக்கவேண்டும்.

எங்களுடைய கல்வித்தரம் பின்தங்கிக் கொண்டுசெல்ல நாங்கள் வெறுமனே உயர்ந்த பெறுபேறுகளை பெற்ற ஒன்று இரண்டு மாணவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் இன்றும் கல்வித்தரத்தில் உயர்ந்த பேறுகளை பெற்று நிற்கிறோம் என வீரம் பேசுவதில் அர்த்தமில்லை.

கல்வித்தரத்தினை மீள்பரிசீலனை செய்து உயர்ந்த பெறுபேறுகளை நாங்கள் எடுக்க வேண்டும். தவறுவோமேயானால் யாழ்ப்பாணத்தினது கல்வித்தரம் இன்னும் குறிப்பிட்ட காலத்திலே கேள்விக்குறியாக மாறிவிடுவதனை நாங்கள் யாருமே தடுத்து நிறுத்திவிட முடியாது.


நாங்கள் எங்கள் கல்வித்தரம் பற்றி சிந்திக்க வேண்டிய காலகட்டத்திலே நாங்கள் நிற்கின்றோம். விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையிலேயே நிற்கிறோம்.

இதுபற்றி நாங்கள் சிந்திக்காமல் இருந்துவிட முடியாது. வெறுமனே நாங்கள், எங்களது குடும்பம் என இருந்துவிட முடியாது. எங்களது சமூகத்தை கட்டிவளர்த்த எமது கலாசாரம், பண்பாடு, விழுமியம் என்பவற்றை திரும்பி பார்க்க வேண்டியது இன்றைய் தேவை. திசைமாறிச் செல்கின்ற எமது சமூகத்தை சரியான பாதைக்குத் திசைதிருப்பி எங்களுடைய விழுமியங்களை பேணிப்பாதுகாத்து கலை, கலாசாரங்களோடு வாழத்துடிக்கின்ற இனம் எமது இனம் என்பதை நிரூபித்துக்காட்டவேண்டும் - என்றார்.

(ப-161-204)


# மாணவரிடையே தமிழ்ப்பற்று குறைவது மொழி, பண்பாடு சீரழிய வழிவகுக்கும்

வலி.தென்மேற்கு,ஓக.4



''எமது தமிழ் மாணவர்களிடையே தமிழ் மொழிஅறிவு மிகவும் குறைந்து கொண்டு வருகின்றது. தமிழை நன்றாக படித்து தமிழ் கலாசாரங்களைப் பின்பற்றி வாழ்ந்தால் தமிழ் வாழும். தமிழினம் ஏற்றம் பெறும். சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கல்கி ஆசிரியர் ''யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பண்டிதர்கள் மிக அதிகம். தடுக்கி விழுந்தால் ஒரு தமிழ் பண்டிதர் மீது தான் விழவேண்டும் என்று கூறும் அளவுக்கு தமிழ்மொழி தேர்ந்த தமிழ் பண்டிதர்கள் இங்கு இருந்தார்கள்" என்று கல்கியில் எழுதினார். இன்று தமிழ்மொழி அறிவும் கலாசாரமும் இங்கு அருகிக்கொண்டு போவது குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.''

பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டு கழகத்தின் தலைவராக தொடர்ந்து 25 வருட காலம் பணியாற்றிய க.சின்னத்தம்பியைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக பண்டத்தரிப்பு ஐக்கிய




விளையாட்டுக் கழகம் கடந்த 26.06.2005 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடத்திய பாராட்டு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்துகையில் தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதினத்தின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விளையாட்டுக் கழகத் தலைவர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென்னிந்திய திருச்சபையின் பண்டத்தரிப்பு குரு வண.வி.பத்மதயாளன், சிவஸ்ரீ ச.நித்தியானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள்.

கலாநிதி எஸ்.ஜெபநேசன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்று சினிமாப் படங்களில் வரும் பாடல்கள் பலவும் எமது கலாசாரத்தை சீரழிப்பனவாக உள்ளன. பெண்களை கேலிசெய்யும் பாட்டுகளும் இவற்றில் இருக்கின்றன. இந்த அளவுக்கு எமது கலாசாரம் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இங்கு பாராட்டப்படும் விளையாட்டுக் கழகத் தலைவர் க.சின்னத்தம்பி தமிழை நன்கு கற்றுத் தேர்ந்த ஒரு இளைப்பாறிய ஆசிரியர். மாணவர்களுக்கு தமது பதவிக்காலத்தில் தமிழ் மொழி அறிவை சிறப்பாக ஊட்டியவர். எமது தென்னிந்திய திருச்சபைக்கும் அவர் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார் - என்றார்.

இவ்விழாவில் தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் சி.கந்தசாமி, ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.நல்லையா ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (-135)

# வீடுகளில் இருந்து மாலை நேரங்களில் கற்பதால் கல்வியில் முன்னேறலாம்

## மாணவர்களிற்கு யாழ்.ஆயர் அறிவுரை

குருநகர்,ஓக.4



மாலை நேரங்களில் வீண் பொழுது போக்காமல் வீடுகளில் இருந்து படிக்கும்போது கல்வியில் முன்னேற்றம் ஏற்படும் என்று குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதயசபையின் நூற்றாண்டு விழாவின் அங்கமாக நடைபெற்ற நூற்றாண்டு மலர் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

மேற்படி நூற்றாண்டு விழாவின் மலர் வெளியீட்டு நிகழ்வு சபையின் தலைவர் கி. தார்சீசியஸ் தலைமையில் குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய யாழ்.ஆயர் தமதுரையில் தெரிவித்ததாவது:-

இந்த மக்களது ஆன்மீகத்தில் நீங்கள் எடுக்கின்ற அக்கறை வீடு வீடாகச் சென்று குடும்பங்கள் எவ்விதமாக பக்தியான குடும்பங்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நீங்கள் அவர்களுக்கு செய்துவருகிறபணி சிறப்பானதாகும். இவ்வைபவத்தை சிறப்பாகச் செய்து இவ்வளவு போட்டிகளையும் நடத்தி மாணவர்களுக்கு உற்சாகத்தை வழங்கி திருஇருதயப் பக்தியைத் தங்களது வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளீர்கள். எனவே, உங்களை நான் பாராட்டுகின்றேன். இவ்விதமான செயற்பாடுகள் மூலமாக ஒரு பக்தியே திருஇருதயப் பக்தியை வளர்க்கலாம். எத்தனையோ பங்கிலே இப்படியான பக்திகள் எல்லாம் அருகிப்போய் விட்டது.

திருஇருதயப் பக்தியானது அண்மைக் காலமாக மாணவர்களது கல்வியில் ஊக்கம் எடுப்பதை நான் காண்கிறேன். அது மிகவும் நல்ல காரியம். நாங்கள் கல்வியில் பின்தங்கி இருப்பது மீண்டும்மீண்டும் வலியுறுத்தப் படுகிறது. கல்வியில் நாம் கவனம் செலுத்தி வீடுகளில் இருந்து படிக்கவேண்டும். மாலை நேரங்களில் வீண் பொழுது போக்காமல் வீடுகளில் இருந்து படிக்கும் போது கல்வியும் வளரும். கல்வி வளரும் போது எமது சமுதாயம் அறிவுபடைத்த சமுதாயமாக உருவெடுக்கும் - என்றார்.

(ப-51-204)

# கந்த முருகேசனாரின் தமிழ்ப் பணிகளை இளந்தலைமுறையினரும் அறியவேண்டும்

குடத்தனை,ஓக.4

தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் தமிழ்ப் பணிகளை நிலைநிறுத்துமுகமாக நடைபெறும் தமிழ்ப்பணிகள் நமது எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் கொண்டு செல்லப்பட்டு அவர்களும் அறிந்து கொள்ளும்படிசெய்யவேண்டும்.

கந்த முருகேசனாரின் 40ஆவது நினைவு விழாவில் பேசிய பண்டிதர் வீ.பரந்தாமன் இவ்வாறு கூறினார்.

தென்புலோலியூர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் 40ஆவது நினைவுதின விழா அண்மையில் புலோலிச் சந்தியில் உள்ள அவரது சிலைக்கு முன்பாக பருத்தித்துறை பிரதேச சபைப் பிரதம நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. யாழ்.செயலக தலைமைக் காரியாலய உதவி அரச அதிபர் வி.வீரபத்திரபிள்ளை, டாக்டர் எஸ்.திருச்செல்வநாயகம் ஆகியோர் விழாவினை மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். தமிழ்த்தாத்தாவின் நினைவுத் திருவுருவச் சிலைக்கு நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் எஸ்.பசுபதி, சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் எஸ்.சின்னையா உட்பட பல பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்தனர். நிகழ்வின் வரவேற்புரையை எஸ். கதிர்காமத்தம்பி நிகழ்த்தினார்.

பண்டிதர் வீ.பரந்தாமன் மேலும் அங்கு உரையாற்றுகையில் தமிழினம் தன்னாட்சி பெற வேண்டுமெனப் பெருந்தாகம் கொண்டிருந்தவர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார். அவரது தமிழ்தாகம் முன்னெடுத்துச் செல்லப்பட்டு வெற்றிபெற உழைக்க வேண்டியது தமிழினத்தின் இன்றைய கடமையாகும். தமிழ்த்தாத்தாவின் தமிழ்ப் பணிகளை தமிழ் உலகம் மறந்துவிடமாட்டாது. தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் அவர் மெருகூட்டி அவற்றினை வளர்த்தார். தமிழை வளர்ப்பதற்கு அவர் தமிழ் நாட்டுடனும் தொடர்பு வைத்திருந்தார்.

இப்படிப்பட்ட கந்த முருகேசனார் ஞாபகார்த்தமாக மணிமண்டபமும், நூல்நிலையமும் அமைக்கப்படவேண்டும். இந்த முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

நிகழ்வின் பிரதம விருந்தினரான பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் எஸ். பசுபதி உரையாற்றுகையில் -

புலோலிக்கு கீர்த்தியையும், புகழையும், மகிமையையும் ஏற்படுத்தியவர்களுள் மிக முக்கியமானவர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார். தமிழ் உலகில் அவருக்கு நிகரானவர் எவரும் இல்லை என்று கூறலாம். அவர் விட்டுச்சென்ற தமிழ்ப் பணியை நாம் தொடரவேண்டும் என்றார்.

இந்த விழாவிலே புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவர் எஸ்.ஆறுமுகநாதன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரதம இலிகிதர் எஸ்.பூபாலசிங்கம், புலோலி கல்வி நிலைய இயக்குநர் எஸ். சிவலிங்கம், சட்டத்தரணி என்.தங்கராஜா உட்படப் பலரும் உரையாற்றினர் ஆசிரியர் தென் புலோலியூர் கே.கனகலிங்கம் நன்றி உரை நிகழ்த்தினார்.

(ப-78)

# தேர்தல் பணிக்கு சு.கட்சி ஏற்பாடு

கொழும்பு, ஓக.4

ஜனாதிபதித் தேர்தல் பணிகள் மற்றும் பிரசாரங்களைக் கவனிப்பதற்கும் கட்சியின் 54ஆவது வருட நிறைவு மாநாட்டை பெருமெடுப்பில் நடத்துவதற்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் 6 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு என ஜனாதிபதி தலைமையில் அண்மையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் கூடியது. எனினும் அவசரப் பணிகள் காரணமாக ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக செய்தி ஒன்றை மட்டும் அவர் அனுப்பி வைத்திருந்தார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வியூகங்கள் பற்றி அங்கு விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள கட்சியின் 54ஆவது வருடாந்த மாநாடு பற்றியும் முக்கியமாகப் பேசப்பட்டது.

இந்தப் பணிகள் அனைத்தையும் க்வனிப்பதற்கும் அவை பற்றிப் பிரசாரப்படுத்துவதற்கும் என 6 குழுக்களும் கூட்டத்தில் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்களின் தலைமையில் எதிர்கால நடவடிக்கைகள் இனி மேற்கொள்ளப்படும் என்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-க)




மதுரை மீனாட்சி அம்பாள்

அருள்வாக்கும் ஜோதிடமும்

K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து மாலை 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376) (54-34-18)



PRESIDENT CFL



பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் Iso 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும். (38345)(21.19.45)

தொடர்பு: Light Line,
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19 - 02 - 1941



உதிர்வு
30 - 07 - 2000

### அமரர் பொன்னையா இராஜகோபால்

(ஸ்ரீதேவி ரான்ஸ்போட் உரிமையாளர்)

அன்பாலே எம்மை அரவணைத்தவரே
பண்பாலே பார் புகழ வாழ்ந்தவரே
நீங்கள் உறங்கி ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
எங்கள் உணர்வுகளில் என்றும் நீங்கள்
உயிருடன் வாழ்கின்றீர்கள் - அப்பா
உறங்காத உங்கள் நினைவுகளில் வாழும்...

-குடும்பத்தினர்.

'ஸ்ரீதேவி'
ஆவரங்கால் புத்தூர். (38455)(46-21-19-21)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### காசிப்பிள்ளை சின்னம்மா

அன்னை மடியில் 02.05.1935
அம்மன் திருப்பாதத்தில் 03.08.1997

அம்மா உன் பிரிவுத் துயரால்
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்திடினும்
உங்கள் அன்பு முகம் மறந்திடுமா? மறைந்திடுமோ?
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் - உங்கள்
நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காதே - அம்மா?
அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!
அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகிய நாம்
இப்போது தூக்கமின்றித் துடியாய்த் துடிக்கின்றோம்
எத்தனை யுகங்கள் மலரட்டும் - எம்
நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!
உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!

உங்கள் ஆத்மசாந்திக்காய் இந்த ஆடி அமாவாசை நன்நாளில் வட்டுவினிப் பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினி கண்ணகை அம்மன், இணுவில் கந்தன் துணை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்மார், மைத்துனர்மார்.
பொ.காசிப்பிள்ளை, பொன்னப்பாபதி,
வட்டுவினி லேன்,இணுவில் மேற்கு.

(சி 44194(21-19-45-32)

# வாசகர் திருமுகம்

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொதுக்கட்டமைப்பைச் சட்டமாக்குங்கள்!

பொதுக்கட்டமைப்பின் சில செயற்பாடுகளுக்கு நீதிமன்று இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்ததனூடாகப் பொதுக் கட்டமைப்பின் செயற்பாடுகள் கேள்விக்குறியாகியுள்ளது. இது தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் 'உதயன்' பத்திரிகையின் 18.07.2005 திங்கட்கிழமை ஆசிரியர் தலையங்கத்தை வாசித்தேன். அது தொடர்பான சில மேலதிக தகவல்களை வாசகர் திருமுகத்தினூடாக முன்வைக்கிறேன்.

அதாவது இலங்கை அரசமைப்புச் சட்ட நடைமுறைகளுக்கு மேலதிகமாக அவசரகாலச்சட்டம் என்று ஒன்றை அவ்வப்போது பல தேவைகளுக்காக ஜனாதிபதி வர்த்தமானி மூலம் பிறப்பித்து பின் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப் பெறுவதை யாவரும் அறிந்ததே!

இந்த வகையில் அரசு - புலிகள் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் சட்ட விரோதமானவையல்ல. ஆனால் சில செயற்பாடுகளுக்கு சட்டத்தில் இடமில்லாத படியால், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொதுக்கட்டமைப்பு விதிகளை வர்த்தமானியில் பிரசுரித்து ஜனாதிபதி வெளியிடுவதனூடாக, இதை நடைமுறைப்படுத்துவதற்கு தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

தொட்டிலடி. - ஜெ.தவேதன்.

## ஒரு கிரிக்கெட் ரசிகரின் ஆதங்கம்

நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். தமிழன் ஆன காரணத்தாற்தான் ஐக்கிய இலங்கையில் நடைபெறும் முக்கோணத் தொடர் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்க்க முடியாத சூழ்நிலையிலுள்ளேன். இங்கிருந்து ஒளிபரப்புச் செய்யப்படும் மேற்படி போட்டிகளை எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள லண்டன், ஜேர்மனி போன்ற நாடுகளில் உள்ளவர்கள் ஆனந்தமாகவும், ஒரே இடத்திலிருந்தும் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆனால் ஒரே நாடான ஐக்கிய இலங்கையில் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் பார்க்கமுடியாத அளவுக்கு அதுவும் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டதோ என நான் நினைக்கின்றேன். இது எந்தளவிற்கு ஒரு பொருத்தமற்ற செயல்.

இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னர் சிலகாலங்களாகப் பலாலி ஒளிபரப்புச் சேவை எடுத்து எமது 'ஐ' சனலிற்கு வழங்கியது. ஆனால் அவர்களது முயற்சி எந்தளவிற்குப் பொருத்தமற்றது என்பதை என்னால் சிந்திக்க முடியவில்லை.

எமது நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை நாம் பார்க்காமல்; எம்மைப் பார்க்க விடாமல் செய்வது எவ்வளவு பொருத்தமற்ற செயல். எனவே தொடர்ந்து வருங்காலத்துக்குரிய போட்டிகளை நாமும் பார்க்கக்கூடியதாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன.

அரியாலை மேற்கு. - கா.பீதாம்பரம்.

## பதிவாளர் நாயகத்தின் செயற்பாடுகள் பிரதேச செயலகங்களிற்கு பன்முகப்படுத்தப்படாதது ஏன்?

பதிவாளர் நாயகத்தின் **(Registrar General)** செயற்பாடுகளான பிறப்பு, இறப்பு திருமணப் பதிவு மற்றும் காணிப்பதிவு போன்றன வடபகுதி நீங்கலாக நாட்டின் ஏனைய பகுதியிலுள்ள பிரதேச செயலகங்களிற்குப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளமை 1992ஆம் ஆண்டிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. அது ஏன் இன்னமும் வடபகுதிப் பிரதேச செயலகங்களிற்கு பன்முகப்படுத்தப்படவில்லை என்பது புரியாத புதிராக உள்ளது. இதற்குப் பதிவாளர் நாயகத்தின் அசமந்தப் போக்கா அல்லது வடமாகாணத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகளின் அசட்டையீனமா காரணம் என்பது தெரியவில்லை. இந்த நிலையில், பின்னயது உண்மையாயின் அதற்கு பின்வருவன காரணமாக இருக்கலாமல்லவா?

1. குறிப்பிட்ட துறையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது அதிகாரம் கைமாறிவிடும் அல்லது அவர்களை மக்கள் அணுகவேண்டிய தேவை ஏற்படாது போய்விடும் என்ற ஒருவகை வரட்டு உணர்வு.
2. ஓய்வுபெற்று மீள் நியமனம் பெற்ற அதிகாரிகள் அல்லது உத்தியோகத்தர்கள் இவ்வாறான அதிகாரப் பன்முகப்படுத்தல் காரணமாகத் தமது சேவையின் தேவை இல்லாமல் போகக்கூடும் என்ற வகையில், தமது சேவை ரத்துச்செய்யப்படலாம் என்ற அச்ச உணர்வு. அதாவது, தங்கள் ஓய்வூதியத்துடன் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகள் மற்றும் தமக்குக் கிடைக்கும் மதிப்பு இல்லாமல் போய்விடும் என்ற உணர்வு.

ஆனால், இவ்வாறானவர்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்படப்போவது ஏற்கனவே இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளினால் இடர்ப்படும் மக்களே என்றால் மிகையாகாது. இதனால், இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்ள் ஏராளம். அவற்றைக் காலதாமதம், போக்குவரத்து, சிரமங்கள், செலவு, தரகர் தொல்லை என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.'

இந்நிலையில், இன்னுமொரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது சாலச்சிறந்தது. அதாவது, இலங்கையில் அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தில் இரண்டு இனங்கள்முரண்பட்டு நிற்கின்ற வேளையில், ஏன் பதிவாளர் நாயகத்தின் செயற்பாடுகள் பிரதேச செயலக மட்டத்திற்குப் பரவலாக்கப்படவில்லை என்பதாகும். இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஏன் இதற்குப் பின்நிற்கிறார்கள். இதை அவர்களால் தெளிவுபடுத்தமுடியுமா? இவர்கள் சில வேளைகளில் ஆளணிப் பற்றாக்குறை (பயிற்றப்பட்டவர்கள் இன்மை) அல்லது இடப்பற்றாக்குறை அல்லது ஆவணங்களைப் பாதுகாக்க முடியாமை போன்றவற்றைச் சாக்குப்போக்கிற்குச் சொல்லலாம். அதனால், அதைவிடுத்து நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிமுறைகளை இச் சமாதானச் சூழலை பயன்படுத்தி கண்டறிய வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பல்லவா?

இது இவ்வாறிருக்க, அண்மையில் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பட்டதாரிகளைப் பதிவாளர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்பட்டன. இதற்குத் தோற்றியவர்களிடம் சில வினாக்கள் அடங்கிய படிவம் வழங்கப்பட்டது. அதில் சேவையாற்ற விரும்பும் மாவட்டம் மற்றும் மூன்று பிரதேச செயலகங்களின் பெயரைக் குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதில் வடபகுதி நீங்கலாக என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, இதிலிருந்து ஒன்று தெரியவருகிறது. என்னவென்றால் அதிகாரிகளின் அசட்டையீனம் தான் பதிவாளர் நாயகத்தின் செயற்பாடுகள் பிரதேச செயலக மட்டத்திற்கு விரிவுபடுத்தப்படாமைக்கான காரணம் என்பதாகும்.

இதைவிட, நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து வெளியான வானொலிச் செய்திகளின் படி நாடெங்கிலும் உள்ள பிரதேச செயலகங்களில் பதிவாளர் நாயகத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக 275 பட்டதாரிகள் நியமிக்கப்பட உள்ளனர் என்பதாகும்.

எனவே, இது குறித்து அதீத அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டியது வடபகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையல்லவா? இது குறித்துப் பொதுமக்கள் இடையறாது கவனித்துக்கொண்டிருந்தார்கள் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திருநெல்வேலி. - சயந்தன்.

# விசுவமடுவில் சிறப்புற நடைபெற்ற புலிகளின் குரலின் முத்தமிழ் அரங்கு

பரந்தன்,ஓக.4

விசுவமடு அரசியல் துறையினரின் ஆதரவில் புலிகளின்குரலின் விசுவமடு வானொலி மன்றம் நடத்திய மாதாந்த முத்தமிழ் கலையரங்க நிகழ்வு கடந்த 28ஆம் திகதி விசுவமடு மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் ஈழச்செல்வனின் தந்தையாரான ஆ.தருமலிங்கம் ஏற்றினார். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச சம்மேளனங்களின் மேலாளர் வ.மோகன். விசுமடுப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வ.பத்மநாதன் ஆகியோர் சுடரேற்றி வைத்தனர். அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் முதல் நிகழ்வாக வரவேற்பு நடனம் இடம்பெற்றது. நடனத்தை செல்வி ஆ.சுதர்சிகா வழங்கினார். வரவேற்புரையை விசுவமடு வானொலி மன்ற உறுப்பினர் ஞா. ஞானகுமார் வழங்கினார். தலைமை உரையை விசுவமடு வானொலி மன்றத் தலைவர் மு. கந்தசாமி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து 'பெண்ணியம்' என்ற தலைப்பில் புன்னைநீராவி பாடசாலை மாணவர்கள் வில்லிசை நிகழ்த்தினர்.

புன்னை நீராவி வித்தியாலய மாணவி க.சுஜிதாவின் பேச்சும் நி.சோபனாவின் கவிதையும் இடம்பெற்றது.

பிரமந்தனாறு மகாவித்தியாலய மாணவர்கள் 'மீண்டெழுவோம்' என்னும் நாடகத்தினை வழங்கினார்கள்.

சிறப்புரையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் வழங்கினார்.

இதனையடுத்து புன்னை நீராவி வித்தியாலய மாணவர்களின் 'சாலமோன்' என்னும் நாடகமும் கண்டாவளை மகாவித்தியாலய மாணவன் பிரபாசுதனின் தனி நடிப்பும் இடம்பெற்றது.

இன்றைய சூழலில் மக்களுக்கு சமாதானம் சாதகமா? பாதகமா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது. கண்ணகி நகர் அம்பாள் கலாமன்றத்தினரின் சிந்து நடைக்கூத்து 'காத்தவராயன்' நாடகமும் மேடையேறியது.

பேபி ஆசிரியையின் நெறி ஆள்கையில் உருவான 'சங்கநாதம்' நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் பங்குபற்றிய மாணவமாணவிகளுக்கும் கலைஞர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சான்றிதழ்களைப் புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருண், விசுவமடு அரசியல் துறைப்பொறுப்பாளர் சோழநிலவன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதி அமிர்தாப், விசுவமடு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் வ.பத்மநாதன் ஆகியோர் வழங்கினர். (த-352)

# தர்மபுரம் நெசவு நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

பரந்தன்,ஓக.4

கண்டாவளைப் பிரிவில் உள்ள தர்மபுரத்தில் கைத்தறி நெசவு நிலையத்தை மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் பல வருடங்களாக இயங்கி வந்த இந்த நெசவு நிலையத்தால் பலர் தொழில் வாய்ப்பைப் பெற்றுவந்தனர். பின்னர் கடந்த கால போரினால் இந்த நெசவு நிலையம் அழிவடைந்தது.

தற்போது கண்டாவளைப் பிரதேச செயலரின் முயற்சியினால் மேற்படி கைத்தெறி நெசவு நிலையத்தை மீண்டும் தர்மபுரத்தில் இயக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இங்கு நெசவுப் பயிற்சி பெறுவதற்கு 18வயதுக்கு மேற்பட்ட பெண்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. 6மாதங்கள் கொண்ட இப்பயிற்சி நெறியில் நாள் ஒன்றுக்கு 50 ரூபாவீதம் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் எனவும் -

பயில விரும்புகின்ற பெண்கள் தங்கள் பகுதி கிராம சேவையாளர் ஊடாக விண்ணப்பத்தைக் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. (த-352)

## அபிஷேக விழா

புளியங்குளம்,ஓக.4

வவுனியா வடக்கு, புளியங்குளம் முத்துமாரி நகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் 28ஆம் வருட அபிஷேக விழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தீபாராதனைகள், விசேட பூசைகள் மகேஸ்வரபூசையும் (அன்னதானம்) என்பன நடைபெறவுள்ளன.

மேற்படி ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறுவதால் இவ்வருடம் ஒருநாள் மட்டும் திருவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (த-355)

# வவுனியா பாலமோட்டையில் மக்களுக்கு பல்வேறு உதவிகள்

புளியங்குளம்,ஓக.4

வவுனியா பிரதேசம், பாலமோட்டை கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கு ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (IFSP) 2004ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என உணவுப் பாதுகாப்புத்திட்ட பாலமோட்டை இணைப்பாளர் திருமதி சுதன் ஜெயந்தி தெரிவித்தார்.

கோயில் குஞ்சுக்குளம், நவ்வி, பாலமோட்டை, ஊறல்குளம், வாரியுடையான், இலுப்பைக்குளம், பனிக்கங்குளம் ஆகிய கிராமங்களிலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மக்களது பொருளாதாரவளத்தை மேம்படுத்தும் பொருட்டு சுயதொழில்களை மேற்கொள்ள பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

250 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான விதைத்தானியமும் 30 குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசு மாடுகளும் 7 குடும்பங்களிற்கு 18 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகளும் 22 குடும்பங்களிற்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

28 குடும்பங்களுக்கு நீரடைப்பு மலசல கூடங்களும் 27 குடும்பங்களுக்கு கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவைதவிர 250 குடும்பங்களுக்குத் தென்னை, பழமரங்கள் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மக்கள் கடை, அரிசிஆலை என்பனவும் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என மேலும் அவர் தெரிவித்தார். (த-355)




# கிருஷ்ணபுரம் கிராம மக்களுக்கு வருமான ஊக்குவிப்புத் திட்டம்

வட்டக்கச்சி,ஓக4

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் கிராமத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கான வருமான ஊக்குவிப்புத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

டெனிஸ் அகதிகள் பேரவையின் ஏற்பாட்டில் மூன்று அரையாண்டுக் கட்டங்களாக இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. முதலாவது கட்டத்தில் வருமான மட்டம் குறைந்த மக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு சுயதொழில் புரிவதற்கான கடன்வழங்கப்படவுள்ளது.

முதலாவது கட்டத்தின் பெறுபேறுகளை மையமாகக் கொண்டே அடுத்த கட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக டெனிஸ் அகதிகள் பேரவைப் பிரதிநிதி தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கான அறிவுறுத்தல் கூட்டம் கடந்த 29ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கிருஷ்ணபுரம் றொபேட் முன்பள்ளியில் டெனிஸ் அகதிகள் பேரவைப் பிரதிநிதி எஸ்.தினேஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் க.காண்டீபன், கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் எஸ்.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (த-405)

## ஆடிப்பூரத் திருவிழா

வட்டக்கச்சி மாயவனூர், திருக்குறள் நன்மாதுமை சமேத கணபதீஸ்வரர் சிவன் திருக்கோயிலில் எதிர்வரும் 7ஆம் திகதி ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது.

நன்பகல் 12மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பமாகும் இத் திருவிழாவில் விசேட பூசைகள் நடைபெற்று அம்பாளுக்கு ருது சாந்தி உற்சவமும் தொடர்ந்து திருஊஞ்சல் நிகழ்வும் நடைபெற்று திருவீதி உலாவரும் நிகழ்வும் இடம் பெறும். (த-405)



கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பெண்கள் சங்கம நிகழ்வு புன்னைநீராவி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், புன்னைநீராவி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி இ.சாரதாதேவி, வித்தியாலய ஆசிரியர் லோகேஸ்வரன், கண்டாவளைப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரவேல், புன்னைநீராவி கிராம சேவையாளர் சு.கேதீஸ்வரன் ஆகியோர் அரங்கில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பெண்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

## விசேட சிகிச்சை

வட்டக்கச்சி,ஓக4

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் வைத்தியரால் விசேட சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

லண்டனில் இருந்து வருகைதந்துள்ள டாக்டர் ஜெகராசாவினால் மார்பு நோயாளர்களுக்கும் நாட்பட்ட வியாதிகளுக்குமான இச்சிகிச்சை மாதத்தின் முதலாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் புதுக்குடியிருப்பிலுள்ள பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையிலும், இரண்டாம், நான்காம் ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சியில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையிலும் வழங்கப்படும் என மருத்துவமனை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (த-405)

## வலுவூட்டல் செயலமர்வு

வட்டக்கச்சி,ஓக.4

கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள கட்டாயக் கல்விக் குழுக்களை வலுவூட்டுவதற்கான செயலமர்வொன்று கடந்த 30ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வள நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இச்செயலமர்வில் பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், சிறுவர் நன்னடத்தை அலுவலர், சிறுவர் பாதுகாப்பு அலுவலர், கரைச்சிப்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச் செயலமர்வினை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த முறைசாராக் கல்விக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நடராசா நடத்தினார். இச் செயலமர்வில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியைக் கற்காமைக்கான காரணங்கள், அவற்றுக்கான தீர்வுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் பாடசாலை செல்லாத மாணவர்களைக் கட்டாயக் கல்விக் குழுவினர் எவ்வாறு அடையாளம் கண்டு பாடசாலையில் இணைப்பது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (த-405)

## சைக்கிள்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஓக.4

முல்லை.தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி நெறியினைத் தொடரும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஐம்பது பேருக்கு சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

உலக கனேடிய பல்கலைக்கழக சேவையாளரின் அனுசரணையுடன் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது.

உலக கனேடிய பல்கலைக்கழக சேவையாளரின் அனுசரணையுடன் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது.

(த-405)

## தொழில்நுட்பக்கல்லூரிக்கு அதிபர் நியமனம்

வட்டக்கச்சி,ஓக.4

முல்லை.தொழில்நுட்பக் கல்லூரிக்கு அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு க.வைரமுத்து அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர். சமாதான நீதிவானான இவர் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவராவர்.

(த-405)

## கல்விக் கண்காட்சி

வட்டக்கச்சி,ஓக.4

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சி கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தினை வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபர் சி.சந்திரராசா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

தரம் - 1 தொடக்கம் 11 வரையான அனைத்து மாணவர்களதும் பாடரீதியான ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கோட்ட மட்டக் கண்காட்சிக்கு வைப்பதற்கான ஆக்கங்களைத் தெரிவு செய்யும் செயற்பாடும் இடம்பெற்றது.

பரவலாக கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கல்விக் கண்காட்சி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-405)

# யாழ்ப்பாண நகரில் வர்த்தகத்துக்குரிய காணியும் கட்டடமும் விற்பனைக்கு

**காணி இலக்கம்: 155 மற்றும் 157 மானிப்பாய் வீதி**
**தற்போது சமுர்த்தி வங்கி இயங்கும் இடம்**
**(சிவன் கோயிலுக்கு அருகில்)**
காணி : நிலப்பரப்பு02 குளி 0.78
காட்சி அறை: 1,300 சதுர அடி (அண்ணளவாக)
இருமாடி கட்டடம்: 2,900 சதுர அடி (அண்ணளவாக)
2005 ஆகஸ்ட் 04 ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 09 ஆம் திகதி வரை முன் அனுமதியுடன் பார்வையிட முடியும்.
விலைகோரல் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முகவரியில் ரூபா 200/= செலுத்திப் பெறவேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விலைகோரல் விண்ணப்பங்கள் 2005 செப்ரெம்பர் 09 ஆம் திகதி மாலை 4.30 மணி அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு கோரல்களுடனும் மீளளிக்கப்படத்தக்க மேலதிக வைப்புப் பணமாக ரூபா 100,000/= செலுத்தப்படல் வேண்டும்.
*மேலதிக தொடர்புகளுக்கு அழைக்கவும்.*

**LIQUIDATORS**
**Home Finance Ltd,**
**C/o SJMS ASSOCIATES,**
**Restructure & Corporate Recovery,**
**Level-4, No:2, Castle Lane,**
**Colombo-04**

**விசாரணைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்:**
**குமார் அல்லது அபயசேகர**
**தொலைபேசி இல: 011 5364293 அல்லது 011 2597183**
**தொலைநகல்: 011 5364295**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 * 11 * 1935



மறைவு
04 * 08 * 2004

## அமரர் V.N. கந்தசாமி

